விலை ரூபா: 10.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பன்னிரண்டு

சங்கு 07 | வள்ளுவர் ஆண்டு 2036 | மார்கழி 20 புதன்கிழமை (04.01.2006) | தொலைபேசி 222 3378, 222 7644 | ஒலி 16

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.
ராம்கோ சீமெந்து

## வவுனியாவில் நாளை ஹர்த்தால்

(வவுனியா)

திருகோணமலையில் 5 மாணவர்கள் சுட்டுக்கொல்லப்பட்டதற்கு கண்டனம் தெரிவித்து வவுனியாவில் நாளை ஹர்த்தால் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

இதற்கான அழைப்பை வவுனியா மாவட்ட மாணவர்அமைப்புக்கள் விடுத்துள்ளன. நாளைய தினம் வவுனியாவில் இடம்பெறும் உள்ளூர் வெளியூர்ப் போக்குவரத்துக்களை இடைநிறுத்தியும், அனைத்து அலுவலகங்களையும் மூடியும் ஹர்த்தாலுக்கு ஆதரவு வழங்குமாறு மாணவர் அமைப்புக்கள் கேட்டுள்ளன.

இக்ஹர்த்தால் காரணமாக ஓமந்தை இராணுவச் சோதனைச் சாவடியில் இருந்தும் போக்குவரத்துக்கள் நடைபெறாதென தெரிவிக்கப்பட்டது.

(ச-4)

## மன்னாரில் கிளைமோர் தாக்குதல்; போராளி உட்பட இருவர் வீரச்சாவு

### இராணுவத்தினரின் சதி என்கின்றனர் புலிகள்



மேஜர் ஜெயானந்தன்

(மன்னார்)

மன்னாரில் விடுதலைப் புலிப் போராளி மீது நேற்று மாலை 4 மணியளவில் கிளைமோர் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. இதன் போது போராளி உட்பட இருவர் வீரச்சாவடைந்தனர்.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியான வவுனியா வாழையங்காடு முள்ளிக்குளம் பகுதியில் மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்தபோது கிளைமோர் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இச்சம்பவத்தில் வவுனியா மேற்கு பிரதேச பொறுப்பாளர் மேஜர் ஜெயானந்தன், அவரது உதவியாளர் நாட்டுப் பற்றாளர் தேவராசா வினோதன் ஆகிய இருவருமே வீரச்சாவடைந்ததாக விடுதலைப் புலிகள் தெரிவித்தனர்.

இராணுவத்தினர் ஊடுருவித் தாக்குதல் நடத்தியுள்ளதாக விடுதலைப் புலிகள் குற்றஞ்சாட்டியுள்ளனர். விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுக்குள் நுழைந்த இராணுவத்தினர் அவர்களை இலக்குவைத்து தாக்குதலை மேற்கொண்டுள்ளனர். இது யுத்த நிறுத்தமீறலென விடுதலைப் புலிகள் கண்காணிப்புக்குழுவில் முறையிட்டுள்ளனர்.

இதேவேளை இத்தாக்குதலுக்கும் தமக்கும் தொடர்பு இல்லையெனத் தெரிவித்துள்ள இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் பிரசாத் சமரசிங்க, யுத்த நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்தான பின்னர் இராணுவத்தினர் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்குள் நுழைவதில்லையெனத் தெரிவித்துள்ளார்.

(ச-4,8)

# யாழ். நகரில் நேற்று ராணுவம் மீது சூடு

# பாதுகாப்புத்தேடி மக்கள் சிதறி ஓட்டம்!

## சில நிமிட நேரத்தில் வெறிச்சோடியது நகரம்

(நமது நிருபர்)

**யாழ். நகர மத்தியில் கஸ்தூரியார் வீதிச் சந்தியில் நேற்று மதியம் இராணுவம் மீது இனந் தெரியாதவர்கள் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் லெப்ரினன்ட் தர அதிகாரி ஒருவரும் மற்றொரு சிப்பாயும் படுகாயமடைந்தனர்.**

**இந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தையடுத்து இராணுவத்தினர் பதில் தாக்குதல் நடத்தினர். இதனையடுத்து யாழ். நகரக் கடைகள் அனைத்தும் உடனடியாக இழுத்து மூடப்பட்டன. ஆட்டோக்கள், தனியார் பஸ்கள், வடபிராந்தியப் போக்குவரத்து பஸ்கள் என்பன மின்னல் வேகத்தில் நகரைவிட்டு மறைந்தன. தாக்குதல் நடைபெற்று ஒருசில நிமிட நேரத்தில் சனசந்தடியின்றி யாழ். நகரம் வெறிச்சோடிக் காணப்பட்டது.**

யாழ். நகரின் மத்தியில் கஸ்தூரியார் வீதியும் ஆஸ்பத்திரி வீதியும் இணையும் சந்தியில் நின்றிருந்த ராணுவத்தினர் மீது இனந் தெரியாதோரால் நேற்று மதியம் 11.45 மணியளவில் துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டது.

இதன்போது லெப்ரினன்ட் தர அதிகாரி ஒருவரும், சிப்பாய் ஒருவரும் படுகாயமடைந்தனர். இச் சம்பவத்தினையடுத்து அயலில் நின்ற (12 ஆம் பக்கம் பார்க்க)

## இந்துப்பூசகர் சுட்டுக்கொலை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டம் கிரான் பிரதேசத்திலுள்ள ஆலையடிச்சேனையில் இந்து ஆலய பூசகரான செல்லத்தம்பி விசாகரட்னம் (வயது 53) நேற்று முன்தினம் இரவு சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

சந்திவெளி கண்ணகி அம்மன் ஆலயத்தில் பூசகராகக் கடமையாற்றிவரும் அவர் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் தனது வீட்டில் நித்திரையாக இருந்த சமயம் அடையாளம் தெரியாத நபர்களினால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

அவரது உடல் பிரேத பரிசோதனைக்காக செங்கலடி மருத்துமனைக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளது.

(ச-4)

## மாணவர்களின் மரணத்திற்கு துப்பாக்கிச் சூடே காரணமாம்

### மருத்துவ அறிக்கையில் தெரிவிப்பு

(திருகோணமலை)

திருகோணமலை பெரியகடை கடற்கரையில் இருக்கும் காந்திசிலை அருகே நேற்று முன்தினம் இடம்பெற்ற 5 மாணவர்களின் மரணங்களுக்கு குண்டு வெடிப்பும், துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுமே காரணமென்று பிரேத பரிசோதனையின் முடிவுகளில் தெரியவந்துள்ளது.

நேற்று முன்தினம் இடம்பெற்ற இத்தாக்குதலில் மொறட்டுவ பல்கலைக்கழக நில அளவை மாணவன் தங்கத்துரை சிவானந்தா, எதிர்வரும் பல்கலைக்கழக ஆண்டில் விஞ்ஞானபீடத்திற்குத் தெரிவுசெய்யப்பட்ட சண்முகராஜா கஜேந்திரன் மற்றும் திருகோணமலை சிறி கோணேஸ்வரா இந்துக் கல்லூரி மாணவர்களான லோகிதராஜரோகன், யோகராஜா ஹேமச்சந்திரா, மனோகரன் ராஜிகர் ஆகியோரே உயிரிழந்தவர்களென அடையாளம் காணப்பட்டுள்ளது.

திருகோணமலை நீதிவான் ராமகமலன் முன்னிலையில் இடம்பெற்ற மரண விசாரணையினைத் தொடர்ந்து உறவினர்களிடம் சடலங்கள் கையளிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை இத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் பலத்த காயங்களுக்கு இலக்கான பரராஜசிங்கம் கோகுலராஜா, யோகராஜா பூங்குழலோன் ஆகிய இரு மாணவர்களும் திருமலை அரசினர் பொது மருத்துவமனையில் அவசர சிகிச்சைப் பிரிவில் தொடர்ந்தும் சிகிச்சை பெற்றுவருகின்றனர்.

யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் திருகோணமலை மாவட்டத் தலைவர் ஆர்தர் கிட்டின் காயமடைந்தவர்களைச் சென்று பார்வையிட்டார். காயமடைந்தவர்களுக்கு துப்பாக்கிக் (12 ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவ வன்முறைகளை கண்டித்து சென்னையில் நேற்று ஆர்ப்பாட்டம்

(சென்னை)

இராணுவ வன்முறைகளைக் கண்டித்து சென்னையில் விடுதலைச் சிறுத்தைகள் இயக்கப் பொதுச் செயலாளர் தொல்.திருமாவளவன் தலைமையில் நேற்று கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இந்த ஆர்ப்பாட்டத்தில் பாட்டாளி மக்கள் கட்சியின் துணைத் தலைவர் சி.ஆர்.பாஸ்கரன், மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக்கழகத்தின் நிர்வாகி வழக்கறிஞர் அதியமான், கவிஞர் அறிவுமதி உட்பட உயர்மட்டத் தலைவர்கள் கலந்து கொண்டனர். (12 ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பில் இராணுவம் மீது கைக்குண்டு வீச்சு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு கல்முனை வீதியில் நேற்றுப் பிற்பகல் இராணுவத்தினர் மீது மேற்கொள்ளப்பட்ட கைக்குண்டுத் தாக்குதலில் இரண்டு இராணுவத்தினர் காயமடைந்தனர். சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்கள் தங்கி வாழும் இடைத்தங்கல் முகாமில் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்ட இராணுவத்தினர் மீதே இத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

காயமடைந்தவர்கள் மட்டக்களப்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். இக்கைக்குண்டுத் தாக்குதலை அடுத்து இராணுவத்தினர் அப்பகுதியைச் சுற்றிவளைத்துத் தேடுதல் மேற்கொண்டனர்.

(ச-8)

# திருமலை மாணவர்கள் படுகொலை மாணவர் அமைப்புக்கள் கண்டனம்

## உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவகம்

நேற்று முன்தினம் திருமலையில் இடம் பெற்ற பல்கலைகழக மாணவர்கள் மீதான படுகொலையானது ஒட்டு தமிழ் மாணவர்களையும் விரக்தியுறச் செய்கின்றது. சாதாரண மாக பல்கலை மாணவர்களை படுகொலை செய்த செய்தியானது ஒட்டு மொத்த தமிழ் மாணவர்களின் எதிர் காலத்தை கேள்விக்குறியாக்கியுள்ளது.

இவ்வாறு அப்பாவிகளை கொலை செய்வதன் மூலம் தமது கொலை வெறிகளைத் தீர்த்து தமிழ்ச் சமூகத்தின் எதிர் காலக் கல்விமான்களை இல்லாது ஒழித்து தமது இனத்தின் அடிமைகளாக்கலாம் என்று இனவெறி ஆட்சியாளர்கள் திட்டமிட்டுள்ளார்கள்.

அன்று யாழ்.பல்கலைக்கழக சமூகம் கொடூரமாகத்தாக்கப்பட்டது. அதற்கு அவர்கள் இராணுவத்தினரை தாக்கினார்கள் என்று பொய்ப்பிரசாரம் செய்தது இனவெறி இராணுவமும் அரசும்.

இன்று அப்பாவி மாணவர்களை கொலை செய்து தங்களைத் தாக்க வந்தவர்கள் என்று மீண்டும் பொய்ப்பிரசாரம் அவிட்டுவிடப்பட்டுள்ளது. பேனாவைத் தூக்கும் கைகள் போர்க்கருவிகளை தூக்காது என்று பகல் கனவு காண்கின்றான் பகைவன். மாணவர்கள் எழுச்சி கொண்டால் எந்தப் படையும் மண்டியிடவேண்டி வரும் என்பதை இத்தருணத்தில் ஞாபகப்படுத்திக் கொள்கின்றோம்.

இந்தப் படுகொலையை வன்மையாக கண்டிப்பதோடு சர்வதேச சமூகம் சிறிலங்கா இராணுவத்தின் இவ் இன வெறி பயங்கரவாதத்தை உடனடியாக வெளிக்கொண்டு வந்து தகுந்த தீர்வினை பெற்றுத்தரவேண்டும் என்றும் கோரி நிற்கின்றோம் என அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம்

நேற்று முன்தினம் இரவு திருகோணமலையில் மொறட்டுவப் பல்கலைக்கழக மாணவர் ஒருவர் உட்பட 5மாணவர்கள் மிகவும் கொடூரமான முறையில் சிறிலங்காப் படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவத்தை யாழ்ப்பாணப் பல்கலைக்கழ மாணவர்களாகிய நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

கடந்த சில வாரங்களாக சிறிலங்கா இராணுவத்தினர் மாணவர்கள் மீது தொடர்ச்சியான தாக்குதல்களையும் அடாவடித்தனங்களையும் மேற்கொண்டு வருகின்றனர்.

இந்நிலைமையானது மிகவும் பாரதூரமான நிலையை நோக்கி தமிழர் தாயகப் பிரதேசம் செல்வதையே எடுத்துக் காட்டுகின்றது. இன்று இளைய சமுதாயத்தின் மீதும் கல்விச் சமூகத்தின் மீதும் கட்டவிழ்த்து விட்டுள்ள வன்முறைச் சம்பவங்கள் பாரிய யுத்தத்திற்கே வழிவகுக்கும். இதனை உணர்ந்து பதவியேற்றுள்ள புதிய அரசாங்கம் ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுப்பதை விடுத்து வெறுமனே குழு அமைத்து விசாரணை என்ற போர்வையில் கண்துடைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதை நிறுத்தி உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அத்துடன் பதவியேற்றுள்ள புதிய 'இராணுவத்தளபதி அவர்கள் கடந்த மாதம் புங்குடுதீவில் படுகொலை செய்யப்பட்ட யுவதியைப் பற்றி கருத்துத்தெரிவிக்கையில், அப்படுகொலையை கடற்படை தான் செய்தாலும் மக்கள் எப்படி கேள்வி கேட்பது என்று கூறியுள்ளார்.

இக்கருத்தானது தமிழ் பேசும் மக்கள் மனங்களில் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது. இக்கூற்றானது ஒரு பொறுப்பற்ற தன்மையை எடுத்துக் காட்டுகின்றது. எனவே வன்முறைகளையும் அடாவடித் தனங்களையும் கைவிட்டு அப்பாவி மக்களின் உயிர்களை பலிக்கடாவாக்காது ஆக்கபூர்மாக சிந்தித்து செயற்படுவதன் மூலமே இவ் அசாதாரண சூழலை தவிர்த்து இயல்பு நிலையை இனி வரும் காலங்களில் இலங்கைத் தீவில் ஏற்படுத்த முடியும் என்பதை கூறிவைக்க விரும்புகின்றோம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

## யாழ்.மாவட்ட உயர்கல்வி நிறுவனங்களின் மாணவர் அமையம்

இலங்கையில் பதவிக்கு வந்திருக்கும் புதிய ஜனாதிபதியும் புதிய இராணுவத்தளபதியும் யதார்த்தையும் இன்றைய இலங்கையின் நிலைமைக்கு யார் காரணமென்பதையும் மறந்து மீண்டும் தமிழ் மக்கள் மீதும் தமிழ் மாணவர்கள் மீது தமது கொலை வெறியை இன்று கட்டவிழ்த்து விட்டுள்ளனர்.

இராணுவத்தினரின் தாக்குதல்களுக்கு எதிராகவும் படுகொலைகளுக்கு எதிராகவும் யாழ்.குடாநாட்டு சமூகம் அரச புறக்கணிப்பில் ஈடுபட்டு தமது எதிர்ப்பை காட்டி வழமைக்கு திரும்பிய அன்றே திருகோணமலையில் வைத்து எமது மாணவ உடன் பிறப்புக்கள் சிறிலங்கா ஆக்கிரமிப்பு படைகளால் வஞ்சகமாக படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

இச் செயலை தாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம். மதிக்கப்பட வேண்டிய மாணவர் சமூகத்தின் மீது தரப்படுத்தல் என்றும் வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்பட்ட போதுதான் அவர்கள் ஆயுதம் ஏந்தினார்கள் இன்று மக்களே ஆயுதப் பயிற்சி பெறும் நிலை சிறிலங்கா ஆட்சியாளர்களாலும் ஆக்கிரமிப்பு படைகளாலும் தோற்றுவிக்கப்பட்டன.

அனைத்தையும் செய்து விட்டு தமது தமிழின அழிப்பை நியாயப்படுத்துவதற்காக புதிய இராணுவத்தளபதி பயிற்சி பெற்ற மக்களை எவ்வாறு மக்களாகக் கூறுவது என கேள்வி எழுப்புகின்றார்.புங்குடுதீவில் இளம் பெண்ணை தனது படையினர் பாலியல் படுகொலைக்கு உட்படுத்தினால் அதனைகேட்க மக்கள் யார் என்று கேள்வி எழுப்புகின்றார் ஒன்று மட்டும் தெளிவாக தெரிகின்றது. யார் என்ன செய்தாலும் தமிழினத்தை அழிப்பது என்ற தமது முடிவில் ஜனாதிபதியும் இராணுவத்தளபதியும் தெளிவாகவே உள்ளார்கள் அதனை செய்தும் வருகின்றார்கள்.

தனது ஒரு லட்சத்திற்கு மேற்பட்ட படைகளை வைத்துக் கொண்டு தமிழ் மக்களையும் புலிகளையும் அழிப்பேன் என சூளுரைக்கிறார். இராணுவத்தளபதிக்கு ஒரு வேண்டுகோள் ஒரு இலட்சம் படைகளை வைத்து உங்களால் கொழும்பை பாதுகாக்க முடியுமா என நாம் கேள்வி கேட்கிறோம்.நாம் யுத்தத்தினை வெறுக்கின்றோம். நீங்கள் வரவேற்கிறீர்கள். யுத்தம் தான் தங்கள் இறுதி முடிவு என்றால் தமிழின படுகொலை தான் தங்கள் பசிக்கு விருந்து என்றால் இலங்கைத்தீவு தீப்பற்றும். இதனை யாராலும் தடுக்க முடியாது! உண்மை நிலை உணர்ந்து முப்பதாயிரத்திற்கு மேற்பட்ட தங்கள் வீரர்கள் யாழ்.குடாவில் மக்கள் மாணவர் எம் முற்றுகைக்குள் என்ற யதார்த்தம் உள்ளார்ந்து புரிந்து ணர்வு ஒப்பந்தத்தை ஏற்று அதன் படி செய்யப்பட்டாலோ விபரிதம் தடுக்கப்படும். இல்லையேல் மக்களுடன் இணைந்து மக்கள் படை மாணவர் படை என நாம் போராட தயாராகவே இருக்கின்றோம்என்ற செய்தியை தங்களுக்கு தெரியப்படுத்துகின்றோம்.உடன் மக்கள் மீதான, மாணவர் எம் மீதான படுகொலையை நிறுத்துங்கள் என குறிப்பிடப்பட்டுள்ளது. (ச)

## யாழ்.மாவட்ட சம்பவங்கள் குறித்து உடனடியாக நடவடிக்கை எடுங்கள்

### கண்காணிப்புக் குழுவிற்கு கஜேந்திரன் எம்.பி.கடிதம்

யாழ்.மாவட்டத்தில் இடம் பெறும் இராணுவ வன்முறைகளை நிறுத்துவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.கஜேந்திரன் யாழ்.மாவட்ட போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுத் தலைவருக்கு கடிதமொன்றினை அனுப்பி வைத்துள்ளார்.

அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

கடந்த ஒரு மாதத்திற்கு மேலாக யாழ்ப்பாணக் குடாநாட்டில் சிறிலங்கா இராணுவத்தினரால் பொதுமக்கள் மீது மேற்கொள்ளப்பட்டுவரும் வன்முறைகளாலும் கைதுகள், சித்திரவதைகள் என்பவற்றினாலும் மக்களின் இயல்புநிலை முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

இருபத்தைந்து பேரை படையினர் கைது செய்து மறைத்து வைத்துள்ளனர். பல பெண்கள் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டுள்ளனர். டிசம்பர் மாதம் மட்டும் இருபத்தைந்து அப்பாவிப்பொதுமக்கள் படையினரால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளதுடன் ஐயாயிரத்திற்கும் அதிகமான பொதுமக்கள் வீதிகளில் பயணம் செய்யும் போது காட்டுமிராண்டித்தனமாக அடித்து சித்திரவதை செய்யப்பட்டுள்ளனர்.

கடற்றொழிலாளர்கள் மீது கெடுபிடிகள் அதிகரிக்கப்பட்டுள்ளது. வடமராட்சியின் பல பகுதிகளிலும் மாதகல் பகுதியிலும் கடற்றொழிலுக்குச் செல்ல விடாது படையினர் தடுத்துள்ளதுடன் கடலுக்குச் சென்றால் சுட்டுக்கொல்லுவோம் என்றும் மிரட்டியுள்ளனர்.

இதனால் பல்லாயிரக்கணக்கான குடும்பங்கள் பட்டினிச்சாவை எதிர்நோக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. படையினரின் இத்தகைய கெடுபிடிகளால் வருமானம் எதுவும் அற்ற நிலையில் வடமராட்சி வல்வெட்டித்துறை மற்றும் பருத்தித்துறை கடற்கரையோரங்களில் வாழும் மீனவர்கள் இடம் பெயர்ந்து பாதுகாப்பாக விடுதலைப் புலிகளின் ஆளுகைக்கு உட்பட்ட கிளிநொச்சிமுல்லைத்தீவு, மன்னார் பகுதிகளுக்குச் சென்று குடியமரும் நோக்கில் தமது படகுகளையும், கட்டுமரங்களையும் எடுத்துச்செல்ல முற்பட்ட போது படையினரால்தாக் கப்பட்டுள்ளதுடன் படகுகள் கட்டுமரங்களை எடுத்துச் செல்ல முயன்றால் சுட்டுக்கொல்லு வோம் என்றும் மிரட்டியுள்ளனர்.

சுனாமியால் அனைத்தையும் இழந்த மீனவர்களுக்கு அரசு எவ்வித உதவிகளையுமே வழங்காதநிலையில் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் உள்ளிட்ட சர்வதேச தொண்டு நிறுவனங்களின் உதவியுடனேயே அந்த மக்கள் படகுகளை பெற்றுக்கொண்டனர்.

இவ்வாறானதொரு நிலையில் படையினரின் இக் கெடுபிடியால் மீனவர்களின் எதிர்காலம் பாதிக்கப்பட்டுள்ளது. மனித உரிமைகளையும் ஏனைய சட்டங்களையும் மீறும் வகையில் படையினரால் மேற்கொள்ளப்படும் இக் கெடுபிடிகளை முடிவுக்கு கொண்டு வரவும் மீனவர்கள் சுதந்திரமாக கடற்றொழிலில் ஈடுபடவும் தாம் விரும்பும் இடங்களுக்குப் படகுகளை எடுத்துச்செல்வதற்கும் நடவடிக்கைகளை எடுத்து உதவும் வண்ணம் அன்புடன் வேண்டுகின்றேன்என அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ச)

## பாலியல் வல்லுறவு அச்சத்தைப் போக்க இராணுவம் உடனடியாக விலகவேண்டும்.

### பத்மினி சிதம்பரநாதன் எம்.பி.

(யாழ்ப்பாணம்)

தமிழர் தாயகப் பகுதிகளில் வாழும் பெண்கள் பாலியல் வல்லுறவு அச்சத்திலிருந்து மீள்வதற்கு தமிழ்க் குடியிருப்புப் பகுதிகளிலிருக்கும் இராணுவத்தினரை உடனடியாக வெளியேற்ற வேண்டுமென யாழ். மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் பத்மினி சிதம்பரநாதன் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது குறித்து அவர் செய்திக் குறிபொன்றை வெளியிட்டுள்ளார். இச் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

வடமராட்சி மாலுசந்தியைச் சேர்ந்த இரு பெண்கள் 01.01.2006 இரவு தமது வீடு இருந்த பகுதியை சுற்றிவளைத்த இராணுவத்தினர் வீட்டிற்கு வெளியில் பலர் காவலுக்கு நிற்க சிலர் வீட்டிற்குள் நுளைந்து தம் மீது பலாத்காரம் செய்ய முயற்சி செய்ததாகவும் அவ்வேளை அவர்களுடன் போராடி தப்பித்தோம் எனவும் மனித உரிமை ஆணைக்குழுவில் 02.01.2006 இல் முறைப்பாடு செய்தனர்.இப்பாலியல் வன்முறை முயற்சி மிகவும் வன்மையாகக் கண்டிக்கத்தக்கது.

யாழ்.குடாநாடு முழுவதும் அண்மைக் காலமாக இடம்பெறும் இராணுவ வன்முறை மூலம் தமிழ் மக்கள் அச்சத்துக்குள்ளாக்கப்பட்டு வருகின்றனர்.

குறிப்பாக பெண்களும் குழந்தைகளும் பயப்பீதி நிலைக்குள்ளாக்கப்படும் ஆபத்து உருவாகியுள்ளது. மனிதாபிமானத்தில் அக்கறையுள்ள அனைவரும் இதனைக் கண்டிக்கவேண்டியது முக்கிமானது.

கண்டிப்பதோடு இந்த நிலைமையை மாற்றுவதற்கு தம்மாலான அனைத்தையும் செய்யவேண்டியது முக்கியமானது. புங்குடுதீவில் தர்ஷினி என்ற பெண் பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டது தமிழ்ப் பெண்களின் மனதில் ஆழமான ஈட்டிபாய்ச்சிய ஒரு சம்பவம்.

அதில் இருந்து மீளமுடியாமல் அவர்கள் தவிக்கின்றார்கள். தமிழ்ச் சமூகத்தால் தமிழ்ப் பெண்கள் மிகவும் பக்குவமாக நோக்கப்படுகின்றனர். அவர்களுக்கு இத்தகைய வல்லுறவுகள் அவமதிப்புகள் இடம்பெறுவதை தமிழ்ச்சமூம் ஒருபோதும் பொறுத்துக் கொள்ளமாட்டாது.

இது தமிழ் இளைஞர்களையும் ஆத்திரமடையச் செய்து வன்முறைக்குள் தள்ளிவிடுகின்றது. இந்நிலையில் இராணுவ ஆக்கிரமிப்பு கரங்களை மேலும் மேலும் இறுக்குவது தமிழ்ப்பெண்களை மிகவும் ஒரு நோய்நிலைக்கும் ,ஓர் பழிவாங்கும் உணர்ச்சியுடன் வேகங்கொள்வதற்கும் தள்ளிவிடும்.

இது கட்டுப்படுத்தப்பட முடியாத வன்முறைகளுக்கு வழிவகுத்து விடும். எனவே உடனடியாக இராணுவ பிரசன்னத்தை நீக்கி மக்களின் இயல்பான வாழ்க்கைக்கு வழிவிடுமாறு அரசாங்கத்திடம் வலியுறுத்த விரும்புகின்றேன் என பத்மினி சிதம்பரநாதன் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

# ஆசிரியர் கலாசாலை மாணவர்களின் பகிஷ்கரிப்புப் போராட்டம் தொடர்கிறது

(யாழ்ப்பாணம்)

கடந்த மாதம் 27ஆம் திகதி பருத்தித்துறையில் வைத்து கைது செய்யப்பட்ட பாக்கியநாதன் கமலக்கண்ணன் எனும் ஆசிரிய மாணவன் தொடர்ந்தும் இராணுவத்தினரால் தடுத்துவைக்கப்பட்டுள்ளார்.

அவரது விடுதலையை துரிதப்படுத்தக் கோரி பலாலி ஆசிரியர் கலாசாலை மாணவர்கள் தொடர்ந்தும் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுவருகின்றனா.

இதனால் ஆசிரியர் கலாசாலையின் கல்விச் செயற்பாடுகள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. அத்துடன், இப் பகிஷ்கரிப்பிற்கு ஆதரவாக கோப்பாய் ஆசிரியர் பயிற்சி கலாசாலையும் இணைந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

எனவே, கைது செய்யப்பட்ட மேற்படி மாணவனை விடுதலை செய்வதற்கு சம்பந்தப்பட்டவர்கள் விரைந்து நடவடிக்கை எடுக்குமாறும், அத்துடன் இனிவரும் காலங்களில் இவ்வாறான செயற்பாடுகள் நடைபெறாமல் இருப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் மேலும் ஆசிரிய மாணவன் விடுவிக்கப்படாத சந்தர்ப்பத்தில் பகிஷ்கரிப்பு போராட்டம் ஏனைய கலாசாலைகளுக்கும் விரிவுபடுத்தப்படலாம் எனவும் மாணவர் மன்றம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற)

# மாணவர்கள் மீதான தாக்குதல் தொடர்ந்தால் மாணவர்களே தமது பாதுகாப்பை உறுதிப்படுத்துவர்

## -யாழ்.பல்கலை முகாமைத்துவ கற்கைகள் வணிகபீட மாணவர் ஒன்றியம்

(யாழ்ப்பாணம்)

திருகோணமலையில் ஐந்து தமிழ் மாணவர்கள் அரச கூலிப் படையாலும் அதன் கைக்கூலிகளாலும் திட்டமிட்டுப் படுகொலை செய்யப்பட்டுள்ளமையை யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் வணிகபீட மாணவர் ஒன்றியம் வன்மையாகக் கண்டித்துள்ளது.

இது தொடர்பில் ஒன்றியம் விடுத்துள்ள கண்டன அறிக்கையில்,

தமிழ் மக்கள் மீதும், தமிழ் பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் ஏனைய மாணவர்கள் மீதும் நடாத்தப்படுகின்ற வன்முறையின் தொடாசசியே இதுவாகும். இதனை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

தமிழர் தாயகத்தில் குழப்ப நிலையைத் தோற்றுவித்துப் போருக்கு ஈர்க்கின்ற ஒரு நடவடிககையே இதுவாகும். அது மட்டுமன்றி கடந்த மாதத்தில் ஏற்பட்டது போன்ற ஒரு அசாதாரண சூழ்நிலையைத் தோற்றுவித்து தமிழ் மக்களைக்கொன்று வருவதுடன் அவர்களின் கொலைகளை நியாயப்படுத்தி அப்பட்டமான பொய்களையும் இராணுவம் கூறிவருகிறது.

வருஙகாலங்களில் இது போன்ற சம்பவங்கள் தொடருமானால் மாணவர்கள் தமது பாதுகாப்பை தாமே உறுதிப்படுத்த வேண்டிய வரும் என்பதை அரசுக்கும் அதன் கூலிப் படைகளுக்கும் தெளிவாகக் கூற விரும்புகின்றோம்.

அத்துடன், கூலிப்படைகளால் உயிர்மாய்க்கப்பட்ட எமது அன்புச் சகோதரர்களுக்கு கண்ணீர் அஞ்சலியை செலுத்துவதுடன், அவர்களின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (ற)

# செயற்திறனற்ற அரச ஊழியர்களை கண்டுபிடிக்க "திடீர் சுற்றிவளைப்பு பிரிவு"

(கொழும்பு)

செயற்திறன் அற்ற அரச ஊழியர்களை கண்டு பிடிப்பதற்காக திடீர் சுற்றிவளைப்புப் பிரிவொன்று அமைக்கப்பட்டுள்ளது.

அரச திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களில் சேவை முகாமைத்துவத்தின் செயற்திறனை அதிகரிக்கச் செய்யும் நோக்கில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக அரச நிர்வாக பிரதியமைச்சர் எ.பி.ஏக்கநாயக்க தெரிவித்துள்ளார்.

இதன் மூலம் அரசாங்க திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்கள் மூலம் பொது மக்கள் தங்கள் தேவைகளை சிரமமின்றி நிறைவேற்றிக்கொள்ளலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

மாவட்டச் செயலகங்கள் பிரதேச செயலகங்கள், கிராம சேவையாளர் அலுவலகங்கள் ஆகியன தொடர்பாக பெரும் எண்ணிக்கையிலான முறைப்பாடுகள் நாளாந்தம் தமக்குக் கிடைத்துவருவதாகத தெரிவித்த அவர் இவ்வாறான குறைபாடுகளை நிவர்த்திசெய்ய இப் புதியதிட்டம் வழிவகுக்குமென்று நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

இதன் பின்னர், குறிப்பிட்ட அலுவலகங்கள் தொடர்பான முறைப்பாடுகளை நேரடியாக அமைச்சுக்கு சமர்ப்பிக்கலாம். கடமை நேரத்தில் வெளியே செல்கின்ற அதிகாரிகள் மற்றும் மதுபோதையில் கடமையில் ஈடுபடும் அதிகாரிகள் தொடர்பாகவும் விசேட கவனம் செலுத்தப்படுமென்றும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (ற-9)

# படுகொலைகளுக்கு கண்டனம்

அண்மைக்காலமாக வடக்கு-கிழக்கிலும், குறிப்பாக யாழ்.மாவட்டத்தில் இடம்பெறும் தாக்குதல்கள், சுற்றிவளைப்புக்கள் என்ற போர்வையில் இடம்பெறும் மனித வதைகள், உளத் தாக்கங்கள் மனிதப் படுகொலைகள் மற்றும் திருகோணமலையில் இடம்பெற்ற தாக்குதல் அனைத்தையும் யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் வன்மையாகக் கண்டித்துள்ளது.

இச் செயலுடன் தொடர்பானவர்களை நீதியின் முன்நிறுத்தி உரிய நடவடிக்கை எடுப்பதுடன் இனிமேலும் இத்தகைய சம்பவங்கள் இடம்பெறாதவாறு அரசாங்கம் உரிய நடவடிக்கையை உடன் எடுக்குமாறும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் கேட்டுக்கொண்டுள்ளது. (ற)

# மன்னாரில் எரிக்கப்பட்ட மனித எலும்புக்கூடுகள் பகுப்பாய்வுக்கு அனுப்ப நீதிபதி உத்தரவு

மன்னாரில் சிறிலங்கா கடற்படையினரால் எரிக்கப்பட்டோரின் எலும்புக்கூடுகளைப் பகுப்பாய்வுக்கு அனுப்பிவைக்க மன்னார் நிதிபதி என்.எம்.எம்.அப்துல்லா உத்தரவிட்டுள்ளார்.

மன்னார் 100வீடமைப்புத் திட்டப் பகுதியில் கடந்த டிசம்பர் 25 ஆம் நாளன்று எரிக்கப்பட்ட மனித எலும்புக்கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டன. டிசம்பர் 23ஆம் நாளன்று சிறிலங்கா கடற்படையினரின் வாகனம் பேசாலையில் கண்ணிவெடித்தாக்குதலுக்குள்ளான 2 நாட்களுக்குப் பின்னர் இந்த எலும்புக்கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டன.

எலும்புக்கூடுகள் கண்டுபிடிக்கப்பட்ட வீட்டின் உரிமையாளர் இமானுவேல் குரூஸ் (வயது 43), அவரது துணைவியார் அந்தோணிக்கம் குரூஸ் (வயது 43), தெரசா குரூஸ் (வயது 41) மற்றும் அவருடைய 4 வயது மகன் திலுக்சன் ஆகியோரது எலும்புக்கூடுகளாக இருக்கக்கூடும் என்று மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள் சந்தேகம் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில் இந்த எலும்புக்கூடுகளை அடையாளம் காண்பதற்காக காலியில் உள்ள கரப்பிட்டிய மருத்துவமனை பகுப்பாய்வுக் கூடத்துக்கு அனுப்ப அனுமதி அளிக்கக்கோரி மன்னார் நீதிமன்றில் பொலிஸார் மனுத்தாக்கல் செய்திருந்தனர்.

இந்த மனுவை விசாரித்த நீதிபதி எலும்புக்கூடுகளை பகுப்பாய்வுக் கூடத்துக்கு அனுப்பி வைக்க உத்தரவிட்டார். பேசாலைத் தாக்குதலையடுத்து சிறிலங்கா கடற்படையினர் நடத்திய காட்டுமிராண்டித்தனமான தாக்குதலில் பல குடும்பத்தினர் மன்னார் வெற்றிமாதா ஆலயததில் அகதிகளாக அடைக்கலம் புகுந்தனர். அதன் பின்னா தங்களது வீடுகளுக்குச் சென்ற போது எரிக்கப்பட்ட இந்த எலும்புக் கூடுகளை கண்டனர். (அ)

# இராசிபலன்

**04.01.2006**
**(மார்கழி 20, புதன்கிழமை)**
**பஞ்சமி முன்னிரவு 10.53 மணிவரை**
**சதயம் முன்னிரவு 10.35 மணிவரை**
**இராகுகாலம் 12.31-2.01 மணிவரை**
**சுபநேரம் 5.01-6.31 மணிவரை**
**சித்தாமிர்தம்**

| | |
|---|---|
| மேடம் | காரிய சித்தி, பெரியோர்உதவி, நல்ல வருவாய், போசன சுகம். |
| இடபம் | அதிகாரம், நல்ல செய்தி, எடுத்த காரியம் கைகூடும், நண்பர்கள் உதவி, |
| மிதுனம் | புதிய திட்டமிடல், தந்தை வழிஉறவு, அதிக செலவு, சரிரப்பிரயாசை |
| கடகம் | எதிர்பாராத அச்சம், முய்ற்சி தடங்கல், போசன நன்மை, ஆரோக்கியக் குறைவு. |
| சிங்கம் | சென்ற இடத்தில் செல்வாக்கு, சுப செய்தி, களஸ்திர நன்மை, பொருள் வருவாய். |
| கன்னி | பகைவரால் நன்மை, செய்தொழில் விருத்தி, தேக நலன், முயற்சி பலிதம். |
| துலாம் | குடும்பக் கவலை, மனச் சஞ்சலம், காரிய தாமதம், பணவிரயம். |
| விருச்சிகம் | சுப செலவு, மனச் சஞ்சலம், கல்வியில் ஆர்வம், நண்பர்கள் சந்திப்பு. |
| தனுசு | காரிய அனுகூலம், சகோதரர் உதவி, நல்ல செய்தி, நல்ல வருவாய். |
| மகரம் | பணவிரயம், விவாதம், வேலைச்சுமை, முயற்சி தாமதம். |
| கும்பம் | தொழில் சிந்தை, விருந்துபசாரம், பெரியோர் சந்திப்பு, உடல் நலம். |
| மீனம் | மனச் சஞ்சலம், நித்திரைக்குறைவு, காரிய தாமதம், நண்பர்கள் சந்திப்பு |

**பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.**
- வளவன்

# அன்பளிப்பு

சுனாமி பேரலை ஏற்பட்டு ஒருவருட பூர்த்தியை முன்னிட்டு பருத்தித்துறை ஆதாரவைத்தியசாலையில் கடந்த நவம்பர் மாதம் 26ஆம் திகதி பிறந்த முதற் குழந்தைக்கு வங்கி வைப்பிட்ட புத்தகத்துடன் அன்பளிப்பு பொருட்களும் வழங்கப்பட்டுள்ளன.

போத்துக்கல் நிறுவனமான ஏ.எஸ்.இ. நிறுவன நிதியுதவியுடன் யாழ். பிராந்திய சுகாதார பிரதிப் பணிப்பாளா ஆ.கேதீஸ்வரனால் இவ் அனபளிப்புகள் அண்மையில் வழங்கப்பட்டது. மேலும் அன்றையதினம் அவ் வைததியசாலையில் பிறந்த மேலும் நான்கு பிள்ளைகளுக்கு அன்பளிப்புப் பொருட்களும் வழங்கப்பட்டன. (ற-35)

# மண்டபம் அமைப்பு

பருத்தித்துறை அரசினர் ஆதாரவைத்தியசாலை வளாகத்தின் முன்பகுதியில் ஜி.ரி.இசற் நிறுவனத்தின் உதவியுடன் நோயாளர்களின் உதவியாளர் தங்குவதற்கு ஒரு இலட்சத்து 89ஆயிரம் ரூபா செலவில் மண்டபம் ஒன்று அமைக்கப்பட்டு வருகிறது.

இம் மண்டபத்தில் நோயாளர்களுக்கு உதவியாக நிற்பவர்கள் தங்கமுடியும் இதுவரைகாலமும் உதவியாளாகள வைத்தியசாலை முன்பாக உள்ள கடைகளின முன்னாலும் ஆஸ்பத்திரி வெளி நோயாளர் மண்டபத்திலும் தங்கி வந்தமை குறிப்பிடத்தக்கது. (ற-35)

# யாழ்.பிராந்திய உள்ளூராட்சி ஆணையாளராக திருமதி மதுமதி விஜயகுமார் நியமனம்

யாழ்பிராந்திய உளளூராட்சி உதவி ஆணையாளராக ஸ்ரீலங்கா நிர்வாகசேவையைச் சேர்ந்த திருமதி. மதுமதி விஜயகுமார் வடக்கு-கிழக்கு மாகாண சபையால் ஜனவரி 1ஆம் திகதி தொடக்கம் நியமிக்கப்பட்டுள்ளார்.

யாழ்.பிராந்திய உளளூராட்சி உதவி ஆணையாளராக ஸ்ரீலங்கா நிர்வாக சேவையைச் சேர்ந்த அதிகாரியொருவர் இல்லாமையால் யாழ்.பிராந்திய மக்கள் வினைத்திறன்மிக்க சேவைகளைப் பெற்றுக்கொள்ள முடியாத அவலநிலை உள்ளதாக வடக்கு-கிழக்கு மாகாண ஆளுனரையும் உளளூராட்சி ஆணையாளரையும் மகஜர் மூலம் கோரியதோடு இது சம்பந்தமாக முக்கியஸ்தர்கள் அடங்கிய குழுவொன்று ஆளுனரை நேரில் சந்தித்து கலந்துரையாடி யாழ்.பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளராக ஸ்ரீலங்கா நிர்வாக சேவையைச் சேர்ந்த ஒருவர் உடனடியாக நியமிக்க வேண்டும் என்றும் கேட்டிருந்தது.

இக் கோரிக்கைகளை ஏற்று வடக்கு-கிழக்கு மாகாண ஆளுநர் யாழ்.பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளராக ஸ்ரீலங்கா நிர்வாக சேவையைச் சேர்ந்தவரும் தற்போதைய யாழ்.மாநகரசபைச் செயலாளருமான திருமதி மதுமதி விஜயகுமாரை நியமிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தார். புதிய பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் வடக்கு-கிழக்கு மாகாண பொது நிர்வாக அமைச்சில் உதவிச் செயலாளராகவும் பணியாற்றியவர், இவர் யாழ்.பிராந்தியத்தில் முதலாவது பெண் உள்ளூராட்சி ஆணையாளரர் என்ற பெருமையையும் பெற்றுள்ளார். இதுவரை சிரேஷ்ட ஆய்வு உத்தியோகத்தரொருவரே உளளூராட்சித் திணைக்களத்தால் உளளூராட்சி உதவி ஆணையாளராக நியமனம் பெற்றும் பணியாற்றி வந்துள்ளார். (அ-52)


# படையணிகளிடையே போட்டிகள்

(கிளிநொச்சி)

புத்தாண்டை முன்னிடடு விடுதலைப்புலிகளின் படையணிகளுக்கு இடையேயான பல்வேறு போட்டி நிகழ்வுகளும் கலை நிகழ்வுகளும் விடுதலைப்புலிகளின் பிரத்தியேக தளம் ஒன்றில் சிறப்புற நடைபெற்றன.

லெப்.கேணல் ராஜன் கல்விப் பிரிவின் கல்விப் பொறுப்பாளர் குமரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பெருமளவிலான ஆண், பெண் போராளிகள், தளபதிகள் ஆகியோர் பங்கேற்றனர்.

போராளிகள், பொறுப்பாளர்கள் தளபதிகள் கலந்துகொண்ட துப்பாக்கி சுடும், பொது அறிவுப் போட்டி ஆகியவற்றில் சிறப்புப் பெறுபேறு பெற்றோருக்கு வட போர்முனை கட்டளைத் தளபதி கேணல் தீபன், சார்ள்ஸ் அன்ரனி சிறப்புத் தளபதி லெப்.கேணல் நகுலன், தளபதிகளான வீரப்பன், முகுந்தன், உமையாள் ஆகியோர் பரிசில்கள் வழங்கிச் சிறப்பித்தனர். (ற-4)



அண்மையில் நடைபெற்ற யா/உரும்பிராய் சந்திரோதய வித்தியாசாலையின் உதயநிலா பவளமலர் வெளியீட்டு நிகழ்வில் விருந்தினர் கிளி/ சோரன்பற்று சி.சி.த.க அதிபர் திருமதி ஆ. இராசரத்தினம் மங்களவிளக்கேற்றுகிறார் அருகில் அதிபர், உபஅதிபர், ஆசிரியர்களும் காணப்படுகின்றனர்.

# இன்று ஒரு தகவல்

## கணவனும் மனைவியும்

ஒருவர் மிகவும் அவசரமாக வந்தார். "சார்! மனிதன் நிம்மதியாக வாழ்வதற்கு என்ன வழி?" என்று கேட்டார். விரைவில் ஒரு திருமணம் செய்யுங்கள் எல்லாம் சரியாகி விடும் என்றேன் .அவர் என்னை ஒரு மாதிரிப்பார்த்தார். "ஏற்கனவே எனக்குத்திரு மணமாகிவிட்டது சார். அதனால் தான் நிம்மதியாக இருப்பதற்கு வழி கேட்கிறேன் உங்களிடம் என்றார்.

சரி இவர் நமது ரகம் என்று நினைத்துக்கொண்டு என்னிடம் இருந்த ஒரு சிறிய புத்தகத்தை அவரிடம் தூக்கிக்கொடுத்து படித்துப்பாருங்கள் என்றேன். திருமணத்திற்குப் பிறகும் சந்தோஷமாக இருப்பதற்கு என்ன வழி? என்ற கேள்விக்கு அந்தப் புத்தகத்தில் வழி இருந்தது. கணவன் மனைவிக்குள் சிக்கல் வராமல் இருப்பதற்கு அதில் சில வழிகளைச் சொல்லியிருக்கிறார்கள். அவையெல்லாம் என்ன என்பதைப் பற்றி இப்போது பார்க்கலாமா?

குடும்பம் என்று இருந்தால் கோபம் வரத்தான் செய்யும். அது வந்துவிட்டுப்போகட்டும் பரவாயில்லை. ஆனால் அந்தக் கோபம் ஒரே நேரத்தில் இரண்டு பேருக்கும் வராமல் பார்த்துக் கொள்ளவேண்டும். ஒரு சமயத்தில் யாராவது ஒருவர் தான் கோபப்படவேண்டும். அடுத்தவர் அமைதியாக இருக்க வேண்டும். அதன்பின் இவர் அமைதியானவுடன் அவர் ஆரம்பிக்கலாம். கோபமாக ஏதாவது சொன்னால் உடனே கோபமாக பதில் சொல்லக்கூடாது. கொஞ்சம் பொறுத்து கோபம் தீர்ந்தவுடன் அந்தப் பதிலை சொல்லாம்.அப்போது பதில் கோபமாக இருந்தாலும் கூட அது அவ்வளவு பெரிதாகக்தெரியாது.

அற்ப விடயத்திற்கெல்லாம் காச் மூச்சென்று கத்திக் கொண்டிருக்கக் கூடாது. உங்கள் இரண்டு பேருக்குள்ளும் ஒரு தர்க்கம் ஆரம்பமாகிவிட்டதென்று வைத்துக் கொள்ளுங்களேன். கடுமையாக இரண்டுபேரும் விவாதம் செய்கிறீர்கள்... அது நீங்களாக இருக்க வேண்டும். அடுத்தவர் ஜெயிப்பதற்கு நீங்கள் துணையாக இருங்களேன் அப்படியென்றால் நீங்கள் கொஞ்சம் விட்டுக்கொடுக்க வேண்டும் அவ்வளவுதான்.

ஏதாவது குற்றம் சொல்லவேண்டுமா செய்த தவறைச் சுட்டிக்காட்டவேண்டுமா விமர்சனம் செய்யவேண்டுமா செய்யுங்கள் ஆனால் சொல்வதை அன்பாக இதமாகச் சொல்லுங்கள். எப்போதோ நடந்த தவறுகளையெல்லாம் இப்போது மீண்டும் நினைவுபடுத்தாதீர்கள்.நான் அப்போதே சொன்னேன் இந்தப் புடவை வேண்டாம் என்று நீங்கள் தான் கேட்கவில்லை இப்போது பாருங்கள் கிழிந்துவிட்டது என்று கத்தினார் ஒரு அம்மா. எப்போது சொன்னீர்கள் ?என்று கேட்டால் பத்துவருடத்திற்கு முன்பு என்றார் அது என்ன ,இன்னும் அப்படியே புதிதாகவா இருக்கும்?

உங்களுக்கு அவர்தான் பெரிது அவருக்கு நீங்கள்தான் பெரிது அதைவிட இந்த உலகத்தில் வேறு எதுவும் முக்கியமில்லை என்று நினையுங்கள் 'நீதான் என் உலகம் ' என்று எத்தனை முறை சொல்லியிருப்பீர்கள்? அதெல்லாம் வெறும் வசனமாகிவிடக்கூடாது. ஏதாவது ஒரு பிரச்சினை யைப் பற்றி கடுமையாக விவாதம் செய்து கொண்டிரு பீர்கள் அதை அப்படியே பாதியில் விட்டுவிட்டுப் படுக்கைக்குப் போய் விடாதீர்கள்.மிகுதியை நாளைக்குப் பேசலாம் என்று அப்படிப் போனால் தூக்கம் வராது பிரச்சினையை முடித்துக் கொண்டு அதன் பின் உறங்கச் செல்லுங்கள்.

ஒரு நாளில் ஒரு முறையாவது உங்கள் துணையைப் பாராட்டி நல்ல விதாமாக கனிவாக ஒரு வார்த்தை சொல்ல வேண்டும் என்று தீர்மானம் செய்யுங்கள். ஏதாவது தவறு செய்து விட்டீர்களா? பரவாயில்லை அதை ஒத்துக்கொள்வதற்கும் மன்னிப்புக் கேட்பதற்கும் தயாராக இருங்கள். அது ஒன்றும கேவலம் இல்லை. வீட்டுக்குள் தானே கேட்கப் போகிறீர்கள். வெளியே யாருக்குத் தெரியப் போகிறது? எப்படியோ உங்களுக்குள் சமரசம் ஆனால் சரி.

ஒரு தகராறு என்று எடுத்துக்கொண்டால் குறைந்த பட்சம் அதற்கு இரண்டுபேர் தேவை. தனியாகவே உட்கார்ந்து கொண்டு நான் இப்போது தகராறு செய்துகொண்டிருக்கிறேன் சார் என்று யாரும் சொல்ல முடியாது. இரண்டுபேர் தகராறு செயகிறார்கள் என்றால் அந்த இருவரில் யார் அதிகமாகப் பேசுகிறார்களோ அவரில் தான் தவறு இருக்கும். அதை மனதில் வைத்துக்கொள்ளுங்கள்.

இதெல்லாம் தான் அந்த் புத்தகத்தில் போட்டிருக்கும் வழிமுறைகள் . இவ்வளவும் சரியாக வராவிட்டால் அதன்பின்பு சொலலுங்கள் வேறும் புத்தகம் இருக்கிறதா என்று தேடுவோம்.

ஒரு கணவன் தனது மனைவியை அழைத்துக்கொண்டு ஒரு மனோதத்துவ டாக்டரிடம் வந்தார். டாக்டர்!எங்களுக்குத் திருமணமாகி முப்பது வருடகாலமாக நாம் ஒரு விடத்தில் கூட ஒததுப் போனதில்லை என்று ஆரம்பித்தார் . உடனே மனைவி குறுக்கிட்டு முப்பது வருடம் இல்லை முப்பத்திரண்டு வருடம் என்றார்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

### சமாதான அனுசரணைப் பணிக்கு

# நோர்வேக்கு பதில் இந்தியாவா? பாட்டாளி மக்கள் கட்சி எதிர்ப்பு

இலங்கை அமைதி முயற்சிகளில் அனுசரணையாளராக உள்ள நோர்வேக்கு பதில் இந்தியாவை செயற்பட வைக்கும் எந்த ஒரு முயற்சியையும் கடுமையாக எதிர்ப்பதாக பாட்டாளி மக்கள் கட்சி தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

விழுப்புரம் தைலாபுரத்தில் கடந்த ஞாயிற்றுக் கிழமை நடைபெற்ற அக்கட்சியின் உயர்நிலை நிர்வாகக் குழு மற்றும் பொதுக்குழுக் கூட்டங்களில் இதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இக்கூட்டங்களுக்கு பாட்டாளி மக்கள் கட்சி நிறுவுனர் டாக்டர் ராமதாஸ் தலைமை வகித்தார்.

அமைதி முயற்சிகளில் இந்தியா பங்கேற்க வேண்டும் என்று இலங்கை அரசாங்கம் கோருவதன் மூலம் எதிர்காலத்தில் எதுவித பலனும் கிட்டக்கப் போவது இல்லை. யுத்த மேகங்கள் சூழ்ந்திருக்கக் கூடிய இலங்கையில் அமைதிப் பேச்சுக்களை முன்னெடுத்து இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணுமாறு நோர்வேக்கு இந்திய அரசு அழுத்தம் கொடுக்க வேண்டும். இலங்கையில் வாழும் தமிழர் களின் நலன் கருதியே அரசாங்கம் செயற்பட வேண்டும்

எந்தச் சூழ்நிலையிலும் எதுவித இராணுவ உதவியையும் இலங்கைக்கு இந்திய அரசு வழங்கக் கூடாது. சிங்களவர்களுக்குச் சமமான உரிமைகளை அளிக்கக் கூடிய இறுதித்தீர்வு இலங்கையில் உருவாக்கப்பட வேண்டும்என்றும் அந்தத் தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-4)

### டாக்டர் ஜயலத் ஜயவர்த்தனவின்

# இயற்கை அனர்த்தத்தை அறிவிக்கும் சைரன் ஒலி வேலைத்திட்டம்

சுனாமி உட்பட சூறாவளி, பூகம்பம்,வெள்ளம் போன்ற இயற்கை அனர்த்தங்களின் போது மக்களை முன்னெச்சரிக்கை படுத்துவதற்காக சைரன் ஒலி பெற்றுக்கொடுக்கும் வேலைத்திட்டம் 2005 டிசம்பர் 19ஆம் திகதி பாராளுமன்ற உறுப்பினர் டாக்டர் ஜயலத் ஜயவர்த்தவினால் காலி மாவட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மொறட்டுவ பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் அண்மையில் பாராளுமன்ற மனுவால் ஸ்தாபிக்கப்பட்ட நிகழ்வுகளின் அவதானிப்பு கமிட்டியின் உறுப்பினரும், விஞ்ஞானியுமான சரத் வீரவர்ணகுல அவர்கள் டாக்டர் ஜயலத்ஜயவர்த்தனவின் சைரன் ஒலி வேலைத்திட்டத்தை பாராட்டியுள்ளார்.

இது மிகவும் முக்கியமான எமது நாட்டிற்கு உகந்த வேலைத்திட்டமாகும் என்று தெரிவித்துள்ளார்.

ஒன்று ரூபா 40,000 பெறுமதியுள்ள இலங்கையில் உற்பத்தி செய்யப்பட்டுள்ள 40 சைரன் ஒலி காலி மாவட்ட கடற்கரைக்கு அண்மையில் உள்ள பொலிஸ் நிலையம் ,இராணுவமுகாம், விகாரை கத்தோலிக்க தேவாலயம் முஸ்லிம் பள்ளிவாசல் போன்றவற்றுக்கு வழங்கப்பட்டுள்ளது.

கையால் இயக்கக்கூடிய எங்கும் இலகுவாக கொண்டுசெல்லக்கூடியதுமாக சைரன் ஒலிக்கருவி பாவனை இலகுவானது.இதன் ஒரு கிலோமீற்றர் 1 1/2 க்கு கேட்கும்.

இவ்வாறு அம்பாந்தோட்டை, மாத்தறை, களுத்துறை, கம்பஹா, கொழும்பு,புத்தளம், மன்னார், யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, திருகோணமலை, மட்டக்களப்பு,அம்பாறை போன்ற மாவட்டங்களுக்கு 300சைரன் ஒலி கருவிகளை பெற்றுக்கொடுக்க ஜயலத ஜயவர்த்தன நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.

இந்த நடவடிக்கைக்கு ஜேர்மன் சமுகசேவை அமைப்பும் ஒத்துழைப்பு வழங்க முன்வந்துள்ளது.(து)





யாழ். ஆஸ்பத்திரி வீதி...



யாழ். நகர மத்தி...



யாழ். தனியார் பேருந்து நிலையம்...





கஸ்தூரியார் வீதி...



யாழ்.மின்சார நிலைய வீதி

யாழ். நகரில் நேற்று நண்பகல் இடம்பெற்ற இராணுவத்தினர் மீதான தாக்குதல் சம்பவத்தைஅடுத்து நகரில் உள்ள வர்த்தக நிலையங்கள் அனைத்தும்இழுத்து மூடப்பட்டன. யாழ். நகரில் குழுமியிருந்த மக்கள் தலை தெறிக்க சிதறி ஓடினர். இவ் அசம்பாவிதங்களை அடுத்து வெறிச்சோடியிருந்த யாழ். நகரப்பகுதிகளைப் படங்களில் காணலாம். (படங்கள் :-தெ.திலீப்)

# இலங்கையுடனான 2வது ஒருநாள் போட்டியிலும்

# நியூசிலாந்து அணி 5 விக்கெட்டுக்களால் வெற்றி



நியூசிலாந்து சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள இலங்கை அணி 4 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடி வருகின்றது. இதில் இரண்டாவது போட்டி நேற்று கிறிஸ்சேச் மைதானத்தில் நடைபெற்றது, இதில் நியூசிலாந்து அணி 5 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது.

நாணயச் சுழற்ச்சியில் வெற்றி பெற்ற நியூசிலாந்து முதலில் துடுப்பெடுத்தாட் இலங்கை அணியை அழைத்தது. இதனடிப்படையில் இலங்கை அணியில் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக தரங்க மற்றும் குணவர்த்தனா ஆகியோர் களமிறங்கினார். தரங்க சிறப்பான ஆரம்பத்தை இலங்கை அணிக்கு பெற்றுக் கொடுத்தார்.

எனினும் அணி 24 ஓட்டங்களைப் பெற்ற போது ஜெயசூர்யாவுக்குப் பதிலாக விளையாடிய குணாவர்த்தனா 3 ஓட்டங்களுடன் பொன்டின் பந்தில் மார் சலியிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து தரங்கவுடன் இணைந்த சங்கக்காரவின் சிறப்பான இணைப்பாட்டத்தால் இலங்கை அணி 133 ஓட்டங்களைப் பெற்றது. எனினும் சீறப்பாக ஆடிய சங்ககார 36 ஓட்டங்களுடன் ரண் அவுட்டனார். தொடர்ந்து தரங்கவுடன் ஜெயவர்த்தனா இணைந்தார். அணி 150 ஓட்டங்களைப் பெற்ற போது ஜெயவாத்தனா 6 ஓட்டங்களுடன் மில்ஸின் பந்தில் மக்குலததிடம் பிடிகொடுத்து அடடமிழந்தார். தொடர்ந்து தரங்காவுடன் அத்தபத்து இணைந்தார். மறுமுனையில் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடிய தரங்க சதத்தைத் பெற்றார். எனினும் அணி 169 ஓட்டங்களைப் பெற்ற போது சிறப்பாக துடுப்பெடுத்தாடிய தரங்க 125 பந்துகளில் 14 ஓட்டங்கள் உட்பட 103 ஓட்டங்களைப் பெற்று ஜேக்கப் ஓரம் வீசிய பந்தில் புல்டனிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்



தார். தொடர்ந்து அத்தபத்துடன் இணைநத டில்சான் 10 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தா. அடுத்து அத்தபத்துடன் இணைந்த மகரூப் 7 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தா. தொடர்ந்து அத்தபத்துடன் இணைந்த ஆனொல்ட் அதிரடியாகத் துடுப்பெடுத்தாடினார். மறுமுனையில் அத்தபத்து அரைச் சதத்தைப் பெற்றார்.

எனினும் அணி 254 ஓட்டங்களைப் பெற்ற போது அத்தபத்து 46 பந்துகளில 52 ஓட்டங்களுடன் ரன்னவுட்டானார். தொடர்ந்து ஆனொல்ட்டுடன் இணைந்து வாஸ் 1 ஒட்டத்தைப் பெற்ற போது இலங்கை அணி 50 ஓவர்கள் முடிவில் 7 விக்கெட்டுக்களை இழந்து 255 ஓட்டங்களைப் பெற்றது. 50 ஓவர்களில் 256 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் நியூசிலாந்து அணியினர் துடுபபெடுத்தாட ஆரம்பித்தனர். ஆரம்பத துடுப்பாட்ட விரர்களாக வின்சன்ற் ஹவ் ஆகியோர் களமிறங்கினர். வின்சன்ற் சிறப்பான ஆரம்பத்தை நியூசிலாந்து அணிக்குப் பெற்றுக் கொடுத்தார். எனினும் அணியில் ஸ்கோர் 59 ஐ அடைந்த போது ஹவ் 12 ஓட்டங்களுடன் சமிந்த வாஸின் பந்தில் முபாரக்கிடம் பிடி கொடுத்து ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து வின்சனுடன் இணைந்த அஸ்ரிவ் சிறப்பாக துடுப்பெடுத்தாடினார். எனினும் 71 ஓட்டங்களைப் பெற்ற போது வின்சன்ற் 46 ஓட்டங்களை மகரூப்பின் பந்தில் விக்கெட் காப்பாளர் சங்கக்காரவிடம் பிடி கொடுத்து ஆட்டமிழந்தார். அதன் பின் அஸ்ரினுடன் இணைந்த புல்ட்டன் சிறப்பான இணைப்பாட்டத்தை பெற்றனர் எனினும் அணி 143 ஓட்டங்களைப் பெற்ற போது புல்டன் 32 ஓட்டங்களுடன் டில்சானின் பந்து வீச்சில் ஜெயவர்த்தனாவிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்த மார்ஷல் களமிறங்கினார். மறுமுனையில் அஸ்ரில் தனது அரைச் சதத்தைப் பெற்றார். அணியின் ஸ்கோர் 170 ஓட்டங்களைப் பெற்ற போது மார்ஷல் 12 ஓட்டங்ளுடன் முரளிதரனின் பந்து வீச்சில் எல்.பி.டப்ளியூ முறையில் ஆட்மிழந்தார். தொடர்ந்து அஸ்ரினுடன் ரைரிஸ் இணைந்தார். இருவரும் நியூசிலாந்து



அணியை வெற்றிக்கு இட்டுச் சென்றனர். அணி 219 ஓட்டங்களைப் பெற்ற போது ஸ்ரைரிஸ் 28 ஓட்டங்களுட்ன் மகரூப் வீசிய பந்தில டில்சானிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார். தொடர்ந்து அஸ்ரினுடன் பகெய்கஸ சிறப்பாக துடுப்பெடுத்தாடி நியூசிலாநது அணி 48 ஓவர்களில் 256 ஓட்டங்களைப் பெற்று 5 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது. அஸ்ரில் ஓட்டமிழக்காமல் 90 ஓட்டங்களையும் கெய்ன் ஆட்டமிழக்காமல் 10 ஓட்டங்களையும் பெற்றனர். ஆடட நாயகனான அஸ்ரில் தெரிவானார். இந்த வெற்றியுடன் 4 போட்டிகள் கொண்ட தொடரில் நியூசிலாந்து அணி 2-0 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கின்றது. (அ-39)

## ஆசிய கோப்பை பெண்கள் கிரிக்கெற்

# இந்திய அணி மீண்டும் பாகிஸ்தானை வென்றது

ஆசிய கோப்பை பெண்கள் கிரிக்கெட் போட்டியில் நேற்றுமுன்தினம் நடநத ஆட்டத்தில் பாகிஸ்தானுக்கு எதிராக 10 விக்கெட் வித்தியாசத்தில் இந்திய அணி மீண்டும் வெற்றி பெற்றது.

இந்தியா இலங்கை மற்றும் பாகிஸ்தான் ஆகிய 3 அணிகள் பங்கேற்றுள்ள ஆசிய கோப்பை பெண்கள் கிரிக்கெட் போட்டி கராச்சியில் நடைபெற்று வருகிறது. இதில் நேற்றுமுன்தினம் நடந்த 6வது ஆட்டத்தில் இந்தியா - பாகிஸ்தான் அணிகள் மோதின. நாணயச் சுழச்சியில் வென்ற



பாகிஸ்தான் அணி முதலில் துடுப்பாட்டம் செய்தது. இந்திய வீராங்கனைகளின் ஆக்ரோசமான பந்து வீச்சினால் பாகிஸதான் அணி 94 ஓட்டங்களில் சுருண்டது.

95 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற எளிதான இலக்குடன் பின்னர் ஆடிய இந்திய அணி 17.3 ஓவர்களில் விக்கெட் இழப பின்றி 95 ஓட்டங்கள் எடுத்து 10 விக்கெட் வித்தியாசத்தில் மீண்டும் வெற்றி பெற்றது. தலைவர் மிதாலிராஜ் 38 ஓட்டங்களும் ருமேலிதர் 54 ஓட்டங்களும் பெற்று ஆட்டமிழக்காமல களத்தில் நின்றனர்.



இறுதிப்போட்டியில் இலங்கையுடன் மோதல்.

இந்தப் போட்டித் தொடரின் முதல் ஆட்டத்தில் இலங்கை அணி 14 ஓட்டங்கள் வித்தியாசத்தில் பாகிஸ்தானை தோற்கடிததது. 2வது ஆட்டத்தில் இந்தியா 10 விக்கெட் வித்தியாசத்தில் இலங்கையையும், 3வது ஆட்டத்தில் இந்தியா 193 ஓட்டங்கள் வித்தியாசத்தில் பாகிஸ்தானையும், 4வது ஆட்டத்தில் இலங்கை 30 ஓட்டங்கள் வித்தியாசத்தில் பாகிஸ்தானையும், 5வது ஆட்டத்தில் இந்தியா 10 விக்கெட் வித்தியாசத்தில் இலங்கையையும் தோற்கடித்து இருந்தன.

ஒரு வெற்றியை கூட பெறாத பாகிஸ்தான் அணி போட்டித் தொடரில் இருந்து வெளியேறியது. எனவே இன்று நடக்கும் இறுதி ஆட்டத்தில் அனைத்து ஆட்டத்திலும் வெற்றி பெற்ற இந்திய அணி இலங்கையை எதிர்த்து ஆடுகிறது. (கி-39)




**நேற்று கொல்கத்தாவில் ஆரம்பமான ரஞ்சித் கோப்பைக்கிண்ண போட்டியல் விளையாட தன்னை தயார்படுத்தி கொள்ளும் விதத்தில் நேற்று முன்தினம் கங்குலி தானாக பந்து வீசும் எந்திரத்தின் மூலம் பயிற்சியில் ஈடுபட்டார். முதலில் 75 மைல் வேகத்தில் எந்திரத்தை பந்து வீசச் செய்து கங்குலி 2 ஓவர்கள் பயிற்சி செய்தார். அதன் பின்னர் அவர் எந்திரத்தின் வேகத்தை அதிகரித்தார். அதாவது 95 மைல் வேகத்தில் பந்து வீசச் செய்து பயிற்சி செய்த போது அந்த எந்திரம் தீ பிடித்து எரிந்தது. இதனால் கங்குலி எந்திரம் மூலம் பயிற்சி செய்வதை அத்துடன் நிறுத்திவிட்டு வலை பயிற்சியில் ஈடுபட்டார்.**

## விளையாட்டு செய்திகள்

# சவால்களை சந்தித்து சாதிப்பேன்

## —கங்குலி



தனது திறமையை மீண்டும் நிருபிப்பதாக அண்மையில் கங்குலி நிருபர்களுக்கு அளித்த பேட்டியின் போது தெரிவிததார். மேலும் அவர் கூறியதாவது.

2005ஆம் ஆண்டு எனக்கு மோசமான ஆண்டாக அமைந்து விட்டது. இப்போது அந்த ஆண்டு முடிவுக்கு வந்திருப்பது மகிழ்ச்சியை கொடுக்கிறது.

முன்னாள் பாகிஸ்தான் வீரர்களும் இந்திய வீரர்கள் சிலரும் என்னைப் பற்றி விமர்சித்து கருத்துக்களை கூறி உள்ளனர். அவர்களுக்கு தோன்றியதை அவர்கள் கூறி உள்ளனர். இதைப்பற்றி நான் கவலைப்படவில்லை.

பாகிஸ்தான் போட்டியில் அதிக ரன்களை குவிக்க வேண்டும் என்பது மட்டுமே எனது ஒரே நோக்கம். இதுதான் எனக்கு நல்லதாக அமையும். யார் என்ன பேசினாலும் அதை நினைத்து மனதை குழப்பி கொள்ளமாட்டேன். இப்போது எந்தவித சர்ச்சையிலும் சிக்கிகொள்ள விரும்பவில்லை.

பாகிஸ்தானை நாம் மீண்டும் அவர்கள மண்ணிலேயே வீழ்த்த இந்த போட்டி நலல வாய்ப்பாக அமையும. நமது துடுப்பாட்டத்திறன் முதலிலேயே நன்றாக இருந்தால் அவர்களை எளிதில் வீழ்த்தி விட முடியும்.

புத்தாண்டில் கடினமாக உழைக்க வேண்டும். வெற்றி பெற வேண்டும் என்று சபதம் எடுத்து இருக்கிறேன். எதிர்வரும் சவால்களை சந்தித்து சாதிப்பேன். இவ்வாறு கங்குலி கூறினார். (கி-39)

புலமைப் பரீட்சை மாதிரி வினாத்தாள்

2006இல் 5ந் தரப் புலமைப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களே! உங்கள் நன்மை கருதி 2006 ஜனவரி முதல் ஒவ்வொரு புதன்கிழமைகளிலும்

புலமைப் பரீட்சை மாதிரி வினாத்தாள்

உங்கள் வலம்புரியில் வெளிவரும்! வாங்கத் தவறாதீர்கள்!

# புத்தாண்டுப் பலன்கள் உங்களுக்கு எப்படி?

## பன்னிரு இராசிகளுக்கும் மார்ச் மாதத்துக்குரிய பலன்கள்

| | | | |
|---|---|---|---|
| ரா | | செ | |
| சந் சூ பு | 2006 | | சனி |
| சு | மார்ச் 1 ராசி நிலை | | |
| | | குரு | கே |

### மேடம்
( அச்சுவினி, பரணி, கார்த்திகை 1 )

செவ்வாய் 2இல் சென்றுவிட்டதால், செய்ய வேண்டிய வேலைகள் சில அப்படியே நின்று விட்டன. சுகத்தில் நின்ற சனி சுகத்தைக் காக்கப் பணம் செலவழிக்க அவசியத்தை உண்டாக்கி விடும். கணவன், மனைவி உறவு திருப்தியானதே. பிரச்சினைகள் தொடர்ந்து இருந்து கொண்டே இருக்கும். உங்களை அவசியமற்ற காரியங்க ளுக்கும் பொய் பேச வைத்துவிடும். முன்பு குறை யாக நின்ற காரியங்கள் தொடர்ந்து முடித்துவிட்டு ஆதாயத்தைப் பெற வழி பிறக்கும். குடும்பத் தில் பலவித பாத்திரங்கள் சேரும், பெண்களுக்கு சூழ்நிலை அமைதியாக இருக்கிறது. குழந்தை கள் ஆரோக்கியமும், கல்வி நிலையும் திருப்திகர மாக அமையப் பெற்றிருக்கின்றது. சிலர் நாகரீக வாகன சேர்க்கையைப் பெறுவர். நல்ல நண்பர்க ளைப் பெறுவதும் குறிப்பிடத்தக்க அம்சங்களா கும். புண்ணிய ஸ்தல பிரயாணம் உண்டாகும். கலைப்பிரிவினர்கள் செலவுகளை மட்டுமே செய்ய வேண்டிய நேரம். வரவுக்கு வழி இல்லை. அயல்நாட்டு கடிதத் தொடர்பு தொழில் வளர்ச்சிக்கு வகை செய்யும். தனம் கொடுக்கல், வாங்கலில் ஓர் அளவு தன்னிறைவு உடையவர்கள்தான். பழைய கடன்களில் முழுவதும் அடைபடவில்லை என்றாலும் நிர்பந்தங்கள் இல்லை. போட்டி, பந்த யம், விளையாட்டு போன்றவைகளில் உங்கள் விருப்பங்களை திருப்பதிப்படுத்திக் கொள்ளலாம். விலகி இருந்த மனிதர்கள் உங்களை நாடி வரு வார். இம்மாதம் அடிக்கடி பிரயாணம் ஏற்படும் என்பதால், ஆரோக்கியத்தைக் கவனிப்பது நல் லது. சீதள பாதிப்பு, வயிற்றுக்கோளாறு, பல்வலி போன்றவையும் பாதிக்கும். எப்போதோ செய்த தீமை விளைவு இப்போது உங்களை மற்றவர் குறைகூற வேண்டி இருக்கும். அவசரப் பேச்சு ஆத்திரச் செயல் இவைகள் கூடாது. அரசாங்க உயர்மட்ட மனிதர்கள் சந்திப்பு ஓர் அளவு திருப் தியாக இருந்த போதிலும், நடைமுறைக்கு வர வில்லை. குடும்பச் சொத்து வகையில் ஏற்பட்ட சலனப் போக்கு இப்போது குறைந்து இருக்கின் றன. சிலர் அயல்நாட்டுப் பிரயாணத்தை மேற் கொள்வது அவசியமாக இருக்கும். போட்டி, பந்தயம், விளையாட்டு, சூதாட்டம் போன்றவை யில் ஈடுபாடு மந்தமாகவே இருக்கும். வேகம் குறைந்துதான் இருக்கிறது. வழக்கு இருப்பின் செலவோடு முடியும். பாதிப்பு இருக்காது. நீங்கள் முன்பு சென்ற வழியில் ஏற்பட்ட தடைகளை அகற்ற தீவிர முயற்சி உடையர்வகளாக இருப் பீர்கள். குடும்பத்தில் தேவைகளை அவசியமே எளிதாகத் தீர்த்துவிட முடிவுக்கு வந்துவிடும். அசைவச்சல் குறைந்து வருகின்றது. அவசரத் தேவைகளை உணுக்குடன் பூர்த்தி செய்து கொள் வதும் மனநிம்மதியைக் கொடுக்கும். கலைப்பிரி வினர்களுக்குத் தான் எப்போதோ செய்த சில ஒப்பந்தம் அல்லது கையெழுத்தினால் இப்போது பாதிப்பு ஏற்பட்டு சிக்கலைத் தீர்க்கலாம். குடும் பத்தில் குழறிக் கொண்டு இருந்த சில விஷயங் கள் அல்லது சொத்து விவகாரங்களில் சுமுக மான பைசலைக் காணலாம். கவன மறதி சற்று அதிகமாக இருக்கும். சிறு சிறு பிரயாணமும் உங்களை பாதிக்கும். கடன் வழக்குப் பிரச்சினை கள் கட்டுக்கடங்கி இருந்தாலும் கடைசிப் பகுதி பற்றாக்குறை இருக்கவே செய்யும். பழைய நண்பர்கள் சிலரைச் சந்திப்பதன் புதிய பிரச்சி னைத் தீர்க்க வழி பிறக்கும். உத்தியோகப் பிரிவு ஆண், பெண்களுக்கு கவன மறதியினால் தவறு ஏற்படுவதும் மேல் அதிகாரிகளின் சீற்றத்திற்கும், வாக்குவாதத்திற்கும் ஆளாகுதல் போன்றவை உண்டாகும்.

### ரிஷபம்
(கார்த்திகை 2, 3, 4, ரோகிணி, மிருகசீரிடம் 1,2)

இப்போது சனி வக்ரம் வேகம் இல்லை. நீங்கள் செயல்படும் விதமும் வேகமாகலாம். குழந்தைகள் கல்வி உயர்வு குறிப்பிடத்தக்கதாக இருக்கும். உத்தியோகப் பிரிவினருக்கு 6இல் சூரி யன். நேராக விரோதிகளை உண்டாக்கும். மாணவ, மாணவிகளுக்கு திருப்தியான கல்வி நிலை உருவாகும். தொழில் வகையில் ஒருவித மான அலைச்சல் இருக்கிறது. கொடுக்கல் வாங்கல் என்னவோ குறித்தபடிதான் இருக்கிறது. குடும்பத்தில் சகோதர வகை மற்றும் திருப்தியாக இயங்கவில்லை. செலவுகள் கவலையை உண் டாக்கும். காதல் கல்யாண விஷயங்கள் கைகூடி வரும். கணவன், மனைவி உறவு கனிவு கொண் டதே. ஜென்மச் சூரியன், வழக்கு வெற்றியைக் கொடுப்பவன். இந்த அர்த்த நேரத்தில் நீங்கள் ஏழரைச் சனியை நினைத்து பயப்படுதல் அர்த்த மில்லை. சனி உங்களுக்கு ஒரு யோக சுக்கிரன் என்பதையும் மறக்க வேண்டாம். இனிமையான கனவுகளைக் காட்டுகிறவன் சந்திரன். தொழில் வழியில் அலைச்சல்பட்ட காரியம் சில அமைப் பாக கூடி வந்துவிடும். சிலவகையில் எழுத்து மூலமாக நன்மைகளும் கிட்டும், வழக்கு இவை கள் கட்டுப்பட்டதாகவே இருக்கும். புகழ்மிக்க புண்ணிய ஸ்தலங்கள் சென்று வருதலும் உண் டாகும். செவ்வாயின் சாரநிலை சகோதர வளர்ச் சிக்கு செலவுகள் வருதலும் உண்டாகும். பலம் பெற ஆரம்பிப்பீர்கள். பழைய விஷயங்களுக் குப் புது மெருகிட்டு செய்ல்படுவது அப்படியே உங்களை வெற்றி வீரர்களாகச் செய்துவிடும். தொழில் சம்மந்தமான செலவுகளும் இருக்கத் தான் செய்யும். சகோதர சகோதரி வகை மிக மிக இணக்கமுடையதே. மலைவளம் சூழ்பிர தேச மனிதர்கள் மூலம் நன்மையும், உங்கள் அவசரத் தேவைகள் மகிழ்ச்சிக்குரிய அளவு திருப்தியாக பூர்த்தியாகும். செய்தொழில் வழி யில் முன்பு ஏற்பட்ட தடைகளைக் களைந்து எறியும் காலமிது. இப்போது மிகவும் வேண்டி யவர்களாக செயல்படுவர். தன்னிலைய்யில் தன் னிறைவு உடையவர்கள் நீங்கள் என்றும் மற்ற வர்கள் நினைக்கும் சூழ்நிலை உருவாகும். செய் தொழில் வழியில் சிறப்பிக்க உங்கள் அலைச் சல் நியாயமானதாக இருக்கும். போட்டி, பந்த யம், விளையாட்டு போன்ற வழிகளில் சில நன் மைகள் இக்காலம் மத்தியில் இருந்து இருக் கும். வெளியூர்க் கடிதம் சுப விஷயங்களைத் தாங்கிவரும். கவன மறதி சற்று அதிகமாக இருக்கும். இருப்பினும் தொழில் வேகம் பெறும்.

### மிதுனம்
(மிருகசீரிடம் 3 ,4 திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 )

இப்போது பாதத்து சனிதான் என்றாலும், எந்த சேதத்தையும் தவிர்க்கக் கூடியவன், பஞ் சமத்து குரு. கவலையை விடுங்க. கணவன், மனைவி உறவில் மிதமான விஷயங்கள் முற்றுப் பெறாமல் இருக்கும். சிலர் அயல்நாட்டுக் கடிதத் தொடர்பில் அவசர பிரச்சினை உடையவர்களாக இருப்பர். குடும்ப சொத்துக்கள் தன்வசம் வந்து சேருதல், புது வாகனம் வாங்குவதும் உண்டாகும். போட்டி, பந்தயம், விளையாட்டு போன்ற வகை யும் பாராட்டுக்களைக் கொடுக்க வல்லது. வெளி யில் இருக்கும். புதிய நண்பர்கள் சிலரைச் சேர்க்க வேண்டிய காலமிது. காதல் கல்யாணம் சம்பந் தமான கடிதத் தொடர்புக்கு ஏற்ற காலமிது. சில வகையில் உங்களுக்குக் கூட்டு முயற்சி நன்மை தரும். வழக்கு அப்படியே நிற்கும். உத்தியோகப் பிரிவு வகை, ஆண், பெண்களுக்கு இடமாறுதல் ஏற்படலாம். குடும்பத்து வேலைகள், மகிழ்ச்சிக்கு ரிய அளவில் வேகமாக இருக்கும். தாமதப்பட்ட காரியங்களில் தனவரவும் இருக்கும். சுப விசேட த்தை பூர்த்தியாக்க நீங்களும் உங்களைச் சேர்ந்தவர்களும் அலைச்சல் உடையவர்களே. இதனால் சிலசமயம் உடல் சீதள நோயும், மருத்துவ சிகிச்சையும் அவசியம். குடும்ப வேலை களை படிப்படியே பூர்த்தியாக்கிக்கொண்டு போக லாம். தூரத்து மனிதர்களின் தொழில் சம்பந்த மான ஒப்பந்தத்திற்கு உறுதுணையாக இருப் பர். குழந்தைகள் கல்வி உயர்வு குடும்ப வகை யில் வெகுகாலமாக முடிக்க முடியாமல் தேங் கிக் கிடந்த சுப விஷயம் குறித்து நல்ல முடிவை இப்போது காணலாம். தொழில் சம்பந்தமான எழுத்து வேலைகள் முடிக்கப் பெறும். சிலருக்கு அரசாங்க ஒப்பந்துங்கள் கூட வரும். உத்தியோகப் பிரிவினர்களுக்கு மாத ஆரம்பத்தில் இருந்து வந்த சில நிகழ்ச்சிகள் சலனமாக இருந் தது. மத்தியப் பகுதிக்கு மேல் தீர்க்கப்பட்டு விடும். புகழ்ச்சிக்காகச் செலவிடுவதைத் தவிர்க் கவும். உத்தியோகப் பிரிவு ஆண், பெண்களுக்கு இடமாற்றமுண்டு. சீரணா போக்கு உடையவர்களாக இருப்பர். குடும்பத்தில் பிணக்கு சலன நிலையும் உண்டாக்கும். கலைப்பிரிவு, எழுத்தாளர் பிரிவு களைச் சேர்ந்தவர்களுக்கு பாராட்டுக்கள் கிடைக் கப்பெறும். மாணவ மாணவிகளுக்கு கல்வி தரம் உயர்வு, உறவினர், நண்பர்களாலும் பாராட் டப்பெறும். தொழில் சம்பந்தமான வகையில் இருந்து வந்த, இதரச் சிக்கல்களையும் ஒரு நல்ல முடிவுக்குக் கொண்டுவரும் காலம் இது. கிரகங்க ளுக்கு சார பலம் உங்களுக்கு அனுகூலமாக இருப்பதால் நீங்கள் நினைத்தபடியே அவர்க ளுக்கு இணங்கி வந்துவிடுவர். எழுத்து மூலம் நன்மை ஒப்பந்தம் போன்றவைகளும் திருப்தியா னதே. அயல்நாடு செல்லும் வாய்ப்பும் உண்டா கும். இது உத்தியோகப் பிரிவினர்களுக்கு மட்டு மல்ல அரசியல்வாதிகளுக்கும் பொருந்தும். நல்ல செவ்வாய் அசட்டு தைரியத்தை தான் உயர்த்துவான். ஆனால் செயலில் வேத்தைக் குறைப்பவனாகும்.

### கடகம்
( புனர்பூசம் , பூசம், ஆயிலியம்

இப்போது புதுப்புது நண்பர்களைச் சந்திப் பீர்கள். அவர்களால் உபகாரம் இருக்கின்றன. இதில் அரசாங்கம் உயர்மட்ட மனிதர்கள் தொழில் வழக்கு மூலம் ஆதாயம் இருக்கின்றன. கண வன் - மனைவி வகைக்கு பூமி வாங்குவது அல் லது ஒப்பந்தம் செய்வதும் உண்டாகும். நீங்கள் எப்போதோ செய்த பாதிப்புகள் இப்போது தலை வலியை உண்டாக்கலாம். இதனால் மற்றவர் கள் தலையீடு உங்களுக்கு அவசியமான பேச் சுகளுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டிய தாகும். உத்தியோகப் பிரிவு ஆண், பெண்களு க்கு உயர்மட்ட மனிதர்களின் தொடர்பு நெருங் கியதாக இருக்கும். இந்த காலத்தில் கடிதத் தொடர்பு கையெழுத்து போடும் வேலைகளும் அதிகமாக இருக்கும். உங்களுக்கு புதுத்தெம்பு பழைய நண்பர்களைச் சந்தித்து அவர்கள் மூலம் சில தொழில் ரகசியங்களையும் அறிவீர் கள். செய்தொழில் நண்பர்களை அரசாங்கம் கணக்குகளைக் கவனமுடன் வைக்க வேண் டும். அரசாங்க வகை உங்களுக்கு தவிர்க்க முடியாத செலவுகளைக் கொடுக்கும். தவறாது உத்தியோகப் பிரிவு ஆண், பெண்களுக்கு நடுப்பகுதி வரையில் மனத் தெளிவான போக்கு மற்றவர் பாராட்டு, புது உடை சேர்க்கை பழைய நண்பர்களைச் சந்திப்பது முக்கிய மாற்றத்திற்கு முயற்சியும் உண்டாகும். இக்காலத்தி கடிதத் தொடர்பாடலும் உண்டாகும். தொழில் வழியில் செய்த முயற்சிகள் பயனற்றதாகிவிடும். புது நண்பர்கள் உங்கள் செயலுக்கு ஒத்தவர்க ளாக இருப்பதே பெரும் வெற்றியாகும். பூர்வீக சொத்து மீது கடன் வாங்குவது அல்லது விற்பதும் செய்தொழிலுக்கு ஆதரவாக இருக் கும். உத்தியோகப் பிரிவினர்கள் தங்கள் எண் ணத்தை பூர்த்தி செய்ய நல்லவாய்ப்பு சேர்க்கை யும் உள்ளது. தகப்பனார் வகையில் சில பொருள் அல்லது பணம் சேர்க்கையும் இக்காலத்தில் வந்து சேரும். இந்த ராசி பெண்களுக்கு குடும்பச் சொத்து வரவு அல்லது புது உடை, அணி கலன்கள் வெண்மை நீலக்கல் அபரண ராசி சக்தியும் குறிப்பிடத்தக்கது. பிற்பகுதி உறவு வழியில் துற் செலவும் தகவலும் கிடைக்கலாம். உத்தியோகப் பிரிவு ஆண், பெண்களுக்கு எழுத்து வகையில் உத்தரவு மூலம் திருப்தியான பதில் எதிர்பார்க்கலாம். சிலர் மனை வாங்கு வதும் உண்டாகும். தேக ஆரோக்கியத்தில் தனி கவனம் செலுத்த வேண்டும். புத்திரன் அல்லது புத்திரியின் சுப மணம் முடிவாகும் காலமிது. கடன் வகை கௌரவத்தைக் குறைக்காது. வழக்கு தள்ளிக் கொண்டே போய்விடும். கடந்து போன காரியம் குறித்து வாக்குவாதம் உண்டா கும். குடும்பத்து மனிதர்களுடன் பழகுவதில் திருப்தி இருக்காது அன்பை வளர்க்க நீங்கள் உறவினர் இல்லம் போய் வருதல் முக்கிய காரி யங்களை எழுத்து மூலியத்தில் செய்து நன்மை பெறுவதும் இருக்கும். இது இடைக்கால நிவா ரணமே.

### சிம்மம்
(மகம், பூரம், உத்தரம்)

உங்களுக்கு ஆரம்ப நாளே அமாவாசை யுடன் சேர்ந்து அட்டமத்து சந்திரன் ராகுவும் இருப்பது எட்டில்தான். வழக்கு பலம் குறைந்து இடமாற்றம் உத்தேசம் படர்ந்துவிட்டன. தூரத் துக் கடிதம் வருகிறது. உத்தியோகப் பிரிவி னர்களுக்கு இடமாற்றம் பிரச்சினை நின்றுவிட் டன. மேல்மட்ட மனிதர்கள் தெளிவான சூழ்நிலை யில் இருக்கின்றனர். கடித வரவு கவர்ச்சியான செய்திகளை கொண்டுவரும். காடு மலைப் பகுதி பிரயாணத்தை மேற்கொள்வதும் கூட உண்டாகும். வழக்கு வகையில் செலவுகள் சில ருக்கு தொடர்ந்து இருந்துகொண்டே இருக்கும். வார்த்தையோடு நின்றிருந்த விஷயங்கள் சில உருவகத்திற்கு வந்துவிடும். இக்கால நடுப் பகுதிக்கு மேல் உங்கள் ஆரோக்கியத்தில் கவ னம் செலுத்துவது போல் புத்திரர் புத்திரியர்கள் வகையிலும் கவனம் செலுத்தவேண்டும். விப த்து, அடிபடுதல் போன்றவைகள் உண்டாகும். தொழில் சம்பந்தமான எழுத்து வேலைகள் முடிக்கப்பெறும். சிலருக்கு அரசாங்க ஒப்பந் தங்கள் கூட வரும். உத்தியோகப் பிரிவினர்க ளுக்கு மாத ஆரம்பத்தில் இருந்துவந்த சில நிகழ்ச்சிகள் சலனமாக இருந்தது. மத்திமப் பகுதிக்கு மேல் அலைந்து திரிந்தவாறு பெறுவீர் கள். அலைச்சலும், அகால உறக்கம், அகால உணவு கொள்வதையும் பூர்த்தி செய்துக்கொள் வீர்கள். தேக ஆரோக்கியம் நன்றாகவே இருக் கும். நாகரீக வாகனம் வாங்குவதும், வாகன சுகமும் சிலருக்கு முக்கிய அம்சமாக இருக்கும். ஒப்பந்தத் தொழில் அயல்நாட்டு வியாபாரம் செய்பவர்களுக்கு ஒருவித பிடிப்பு இருக்கிறது. உடல் சீதள நோயால் பாதித்து நீங்கும். இரு குடும்பம் உள்ளவர்களுக்கு ஒரு வழியில் மிகத் தவிர்க்க முடியாத இடையூறுகள் இருக்கின்றன. சிலர் திருமணம் போன்ற சுப விஷேடங்களை முடிப்பதும், கடைசி நேரத்தில் தவறிப் போவதும் உண்டாகும். வெளியூர் பிரயாணம் அடிக்கடி இருக்கின்றன. சகோதர, சகோதரி வகை சுபச் செலவும் உண்டாகும். தூரத்து உறவினர் வழியில் கருமம் தோன்றுதலும் செலவுகளும் இடம் பெறக்கூடும். மேல் அதிகாரிகளின் போக்கு அவ்வளவு நன்றாக இருக்காது. குடும்பத் தேவைகள் அதிகமாக இருந்தும் அவைகளைப் பூர்த்தி செய்வதில் மற்றவர்களுடன் பிணக்கு உண்டாகும். குழந்தைகள் குடும்ப வகைக்கு ஆடை அணிகலன் செலவு நெருக்கடியில் பூர்த்தி செய்யப்படும். மாணவ, மாணவிகள் சற்று கவனமாகப் படிக்கவேண்டும். தொழில் வழிக்கு முயற்சி, மூன்றாவது மனிதர்கள் உறவி னர்கள் பாராட்டாமல் இருக்கமாட்டார்கள். தொழில் வழி தனம் கொடுக்கல் வாங்கல் திருப் தியான அம்சத்தில்தான் இருக்கின்றன.


### கன்னி
(உத்தரம் 2,3,4, அத்தம், சித்திரை 1,2)

உங்கள் நெருங்கிய நண்பர்களுக்கு நீங்கள் உதவியாக இருப்பீர்கள். பூமி, வீடு போன்ற பொருள் விற்கவும், வாங்கவும் உங்களால் பெரிய நன்மை அவர்களுக்கு இருக்கிறது. தாய்வழி உற வினர் கருமச் செலவு உண்டாகும். உத்தியோகப் பிரிவினர்களுக்குப் ஃப்ரமோஷன் தடை இருக் கும். புத்திர கல்வி குறையும். புத்திரியர் கல்வி உய ரும். இலாகா மாற்றம் தவிர்க்க முடியாதது. நண் பர்கள் சிலரைச் சந்திப்பது நல்ல ஆலோச னைக்கு வழி வகுக்கும். குடும்ப வகைக்கு நாகரிகப் பொருள் சேர்க்கையும் உண்டாகும். புத்திரியர் வகை கல்வி உயர்வு, வழக்கு, கடன் பிரச்சினைக ளும் கட்டுப்பட்டுதான் இருக்கும். மாணவ, மாண விகளுக்கு தேர்வில் வெற்றியுண்டு. ஆனால் மதிப் பெண் எடுப்பது தான் குறைவாக இருக்கும். நேராக இருக்கும் விரோதிகளையும் பலமிழக்க வைக்கும் சனி. ஆனால் அதேநேரம் இடை இடையே சத்ருக்கள் மூலம் சிலருக்கு எழுத்து வகையிலும் பாதிப்பு உண்டாக்க வல்லது. உற வினர் மூலம் வாக்குவாதம் உண்டாகும். முன் அனுபவங்கள் சில வழியில் உங்களை ஆபத்திலி ருந்து காப்பனவாகவும் இருக்கிறான். சார எல்லை சில சமயம் கெடுதலை உருவாக்கினா லும், சொந்த வீட்டுச் சனி நன்மையும் செய்வான். குடும்பத்தில் சுப நிகழ்ச்சிகள் இம்பெறாமல் இல்லை. பொலிஸ் துறையினர் மூலம் சில நன் மைகளைப் பெறுவீர். எழுத்து நன்மைகள் இருக் கின்றன. போட்டி, பந்தயம், விளையாட்டு போன்ற வழிகள் வெளிச்சமாக இருக்கின்றன. குறையாக விட்ட கட்ட வேலைகளைப் பூர்த்தி செய்வதும் இப் போதுதான் இருக்கும். பெண்கள் வகைக்கு சிகப்புக்கல் ஆபரண சேர்க்கை உண்டாகும். பட்டு உடைகள் பசும் பொன் ஆபரண சேர்க்கை, திருமணம் போன்ற சுபமும் உண்டாகும். கடன் வழக்கு வகையும் காலம் தள்ளிப்போய் வருவது போல் இருந்து கடைசிக் கட்டத்தில் மாறுதல் அடைந்துவிடும். போட்டி, பந்தயம் போன்றவை களால் ஆதாயம் இருக்கின்றன. புகழ்மிக்க மனிதர்களின் சந்திப்பு புது நண்பர்களைச் சேர்க்கும். கணவன், மனைவி உறவு கவர்ச்சி யாகவே இருக்கின்றன. நண்பர், உறவினர் உங்களுக்கு இப்போது உறுதுணையாக இருப் பர். போட்டி,பந்தயம்,விளையாட்டு இவைகள் முழு வதும் பயன்தராது. கட்டடம் கட்டுவது, இதர ஒப் பந்த தொழில் உள்ளவர்கள் புதிய ஈடுபாட்டில் இருப்பதால் பழைய வேலைகள் சிலரது அப்ப டியே நிற்கின்றன. கலைப்பிரிவினர்களுக்கு சிறப்புமிக்கதாக இருக்கும். புதிய ஒப்பந்தம் தன ஆதாயம் உண்டாகும். உத்தியோகப் பிரிவினர் சிலருக்குப் பதவி உயர்வு, இலாகா மாறுதலும் உண்டாகும். மாணவ, மாணவிகளுக்கு கிரகங்க ளின் சஞ்சாரம் தெளிவாக இருப்பதால் தேர்வில் வெற்றியை உண்டாக்கும். பிரயாணம் மட்டும் குறித்தபடி இல்லை. தள்ளிப் போய்விட்டது.

# ஏமாற்றிவிட்ட 2005

வலம்புரி நினைவுக் குறிப்பு

## மார்ச்



02.03.2005 *புரிந்துணர்வு உடன்படிக்கை கைச் சாத்திடப்பட்டு 3 ஆண்டுகள் கடந்தும் அதன் பயன்கள் தமிழ் மக்களுக்கு எட்டாமல் இருப்பதை சர்வதேச சமூகத்திற்கு எடுத்துக்காட்டும் வகையில் அரசின் அசமந்தப் போக்கைக் கண்டித்து யாழ்.குடா நாட்டில் மாபெரும் பேரணி.

*அவுஸ்திரேலிய தூதுவர் பிரேட் பிரேஜ் மட்டக்களப்பு விஜயம்.

04.03.2005 *ஜே.வி.பியினர் மேற்கொள்ளும் சட்டவிரோதக் குடியேற்றத்தை ஆட்சேபித்து திருகோணமலையில் பூரண ஹர்த்தால்.



*யாழ். ஆஸ்பத்திரி வீதியில் இராணுவத்தினரின் உழவியந்திரம் மோதி வேம்படி பாடசாலை மாணவி நாகேந்திரம் துளசிகா பலி. யாழ்.நகரில் களேபரம். இராணுவ காவலரண்கள் தகர்ப்பு. ஸ்ரீ.சு.க.வின் யாழ். அலுவலகம் நிர் மூலமானது.



05.03.2005 *நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிரஸ்கர் கிளிநொச்சியில் சு.ப.தமிழ்ச்செல்வனுடன் சந்திப்பு.

07.03.2005 *இராணுவத்தினரின் தாக்குதல்களைக் கண்டித்து யாழ்.பல்கலைக்கழக, தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்கள் கண்டனப் பேரணி.

10.03.2005 *சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையிலான உயர் மட்டக் குழு ஐரோப்பிய நாடுகளுக்கு விஜயம்.



11.03.2005 *சாவகச்சேரியில் இராணுவத் துருப்புக் காவியுடன் மோட்டார் சைக்கிள் மோதி விபத்து. இராணுவக் காவலரண்கள் அழிப்பு.

12.03.2005 *சாவகச்சேரியில் தொடர்ந்தும் வீதி மறியல்.

*நோர்வே வெளியுறவு அமைச்சின் அலுவலகத்தில் எரிக்சொல்ஹெய்ம் - சு.ப.தமிழ்ச்செல்வன் சந்திப்பு.



15.03.2005 *கனேடிய பாராளுமன்ற உறுப்பினர் குழு யாழ்.வருகை.

16.03.2005 *சு.ப.தமிழ்ச்செல்வன் குழுவினர் ஜேர்மன் பயணம்.

18.03.2005 *வலி.வடக்கிலிருந்து இடம்பெயர்ந்தோர் தம்மை மீளக் குடியமர்த்துமாறு கோரி பிரதேச செயலகம் முன்பாக ஆர்ப்பாட்டம்.

*சு.ப.தமிழ்ச்செல்வன் குழு சுவிஸ்லாந்து பயணம்.

23.03.2005 *சு.ப.தமிழ்ச்செல்வன் குழுவினர் சுவிஸ் வெளிவிவகாரத் தூதுவர் தோமஸ் கிறிஸ் மஸ்கர் தலைமையிலான உயர்மட்டக் குழுவினருடன் சந்திப்பு.

26.03.2005 *தமிழீழத் தேசியத் தொலைக்காட்சி ஒளி பரப்பு சேவை ஆரம்பம்.



28.03.2005 *உயர் பாதுகாப்பு வலயங்களை அகற்றி இயல்பு வாழ்வை ஏற்படுத்தக் கோரி பருத்தித்துறையில் கண்டனப் பேரணி.



*ஒஸ்ரியாவில் சு.ப.தமிழ்ச்செல்வன் குழுவினர் சர்வதேச அமைதிக்கான குழுவினருடன் சந்திப்பு.

29.03.2005 *வியன்னாவில் சு.ப.தமிழ்ச்செல்வன் - எரிக் சொல் ஹெய்முடன் சந்திப்பு.



30.03.2005 *பின்லாந்து வெளிவிவகார அமைச்சர் தலைமையிலான குழுவினருடன் சு.ப.தமிழ்ச்செல்வன் குழு சந்திப்பு.

31.03.2005 *கொழும்பில் பூமியதிர்வு.

## உலக அரங்கில்


11.03.2005 *ஈராக்கில் மசூதியில் குண்டுவெடிப்பு 47 பேர் பலி 80 பேர் காயம்.

15.03.2005 *மணிலா சிறையில் பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டில் 22 கைதிகள் பலி.

17.03.2005 *ரஷ்யாவில் விமான விபத்து 49 பேர் பலி.

20.03.2005 *பாகிஸ்தானில் மசூதியில் மனித வெடிகுண்டுத் தாக்குதல் 60 பேர் பலி.

22.03.2005 *தென்னிந்தியத் திரைப்பட நடிகர் ஜெமினி கணேசன் காலமானார்.



28.03.2005 *இந்தோனேசியாவில் நில நடுக்கம் 2000 பேர் பலி.

(தொடரும்...)

# மொழிபெயர்ப்பாளராக பதவியேற்பு



லயன் எம்.பி சண்முகநாதன் தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளுக்குமான மொழி பெயர்ப்பாளராக அண்மையில் யாழ்.மாவட்ட நீதிமன்ற நீதவான் இ.த.விக்னராஜா முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார்.

இவர் தெல்லிப்பளை யூனியன் கல்லூரி பழைய மாணவரும் முன் னாள் தொழில்நுட்பவியலாளரும் அகில இலங்கைச் சமாதான நீதிவானும் சாவகச்சேரி அரிமாக் கழகத்தின் செயலாளரும் சாவ கச்சேரி பழனி ஆண்டவர் ஆலய அறநெறிப் பாடசாலை ஆசிரியரும் சிறந்த சமூக சேவையாளருமாவார். அத்துடன் மும்மொழிகளி லும் இவரது புலமையை சாவகச்சேரி லயன்ஸ் கழகம் நன்றாகப் பயன்படுத்தி வருவது குறிப்பிடத்தக்கது. (ற)

# நல்லொழுக்க நற்பண்புகளை ஏற்படுத்துவதற்காக பாடசாலைகளில் அறிவுறுத்தல் நிகழ்ச்சிகள்

(கொழும்பு)

பாடசாலை மட்டத்தில் நல்லொழுக்க நற்பண்புகளை ஏற்படுத்தும் புதிய திட்டமொன்றை மேற்கொள்ளவுள்ளதாக கலாசார மற்றும் தேசிய உரிமைகள் தொடர்பான அமைச்சர் மஹிந்த யாப்பா அபயவர்த்தன தெரிவித்துள்ளார்.


சமூகத்தின் மத்தியில் தளர்ந்துள்ள ஒழுக்க நெறியை மீளக்கட்டி எழுப்புவதே இதன் நோக்கமாகுமென்றும் அவர் தெரிவித்தார்.

இதன் அடிப்படையில் நாடளாவிய ரீதியில் அனைத்து பாடசாலைகளிலும் அறிவுறுத்தும் நிகழ்ச்சிகளை நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

பிரதேச கலாசார மத்திய நிலையம் ஊடாக இந்தச் செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்த உத்தேசித்துள்ளதாக அமைச்சர் மேலும் தெரிவித்தார். (அ-9)

# நிவர்த்திக்கப்படாத தேவைகளுடன் இயங்கும் சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலை

மழைக்காலம் வேறு எவற்றை யெல்லாம் பாதிக்கின்றதோ இல் லையோ சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலைக்கு வரும் நோயா ளிகளை அதிகம் பாதித்து இருக்



டாக்டர் அம்பிகை பாலனும், ஊழியர்களும் சேர்ந்து அமைத்த வாழைத்தோட்டமும் பூந்தோட்டமும்.

கின்றது. 'பட்ட காலபடும் கெட்ட குடியே கெடும்' என்பதுபோல ஏற் கனவே எத்தனையோ இடர்களை எதிர்நோக்கியிருக்கும் அவர்களுக்கு மழைக்காலம் நிச்சயமாய் ஓர்



வைத்திய அதிகாரி டாக்டர் அம்பிகைபாலன்


மரணவேதனையைத்தான் கொடுத் திருக்கிறது.

இதில் குறிப்பிடக்கூடிய ஒரு பிரச்சினை வெளிநோயாளர் பகுதி யில் உள்ளவர்களுக்குத்தான் ஏற்பட்டுள்ளது. வைத்தியசாலைக் குள் நிற்பதற்கு இடம்போதாமை யால் அவர்கள் வெளியே உள்ள மரநிழலில்தான் வரிசையாக இது வரைகாலமும் நின்று வந்தார்கள். ஆனால் மழைக்காலத்தில் அவர் கள் வெளியேயும் நிற்க முடியாமல் உள்ளேயும் செல்லமுடியாமல் அவதியுறும் ஒரு நிலைமை ஏற்பட் டிருக்கின்றது. குறிப்பாக செவ்வாய், சனி ஆகிய தினங்களில் வெளி நோயாளர் பிரிவில் அதிகமானவர் கள் சிகிச்சைக்கு வருவதால் அவர்களுக்கு இப்பிரச்சினை ஏற் பட்டுள்ளது. அதிலும் வயதானவர் கள் வரிசையில் நின்று அவதிக் குள்ளாகும் ஒரு அவலநிலையை இவ் வைத்தியசாலையில் அவ தானிக்கமுடிகின்றது.

சாவகச்சேரியில் உள்ள 67,000 மக்களும் இலவசமாகசிகிச்சை பெறக்கூடிய ஒரு இடம் இவ்வைத் தியசாலை என்பதுதான் இங்கு மனதை வருத்தும் ஒரு உண்மை.

நாள் ஒன்றுக்கு 300பேர் வெளி நோயாளர் பிரிவிலும், 10பேர் அவ சர நோயாளர் பிரிவிலும் இங்கு அனுமதிக்கப்படுகின்றனர். கைதடி, முகமாலை வரையிலுள்ள எல்லா இடங்களிலிருந்தும் அவசர நோயா ளர்கள் இங்குதான் எடுத்து வரப் படுகின்றனர். மேலதிக சிகிச்சை தேவைப்படும்போதுதான் அவர்கள் யாழ்போதனா வைத்தியசாலைக்கு அனுப்பப்படுகின்றனர்.

இது ஒருபுறம் இருக்க அங்கு இருக்கும் ஆண்கள் விடுதியின் நிலைமை எல்லாவற்றையும்விட மோசமாக இருக்கின்றது. விடுதி யின் முன்பக்கம் தாழ்ப்பாள் போட்டு கட்டப்பட்டிருக்கின்றது. ஆனால் மழை பெய்யும் தருணங்களில் அதையும் மீறி சாரல் அடிப்பது




யுத்தத்தினால் சேதமடைந்த வைத்தியசாலையின் முன்புறம் (கண்டி வீதி)

நோயாளர்களை பெரும் துன்பத்தி லாழ்த்தியுள்ளது. இதுமட்டுமல்லாது ஆண்கள் விடுதியில் உள்ள ஒரே ஒரு மலசலகூடமும் எல்லோருக் கும் போதாமல் உள்ளதுடன் அதன் குழி அடிக்கடி நிரம்பி வழிந்து வைத்தியசாலைச் சூழலையே மாசுறச் செய்கின்றது.

இங்குள்ள ஒரு சிறிய ஆய்வு கூடம் நிரிழிவு நோயாளர்களை பரி சோதிப்பதற்காக மட்டும் பயன்படுத் தப்படுகின்றது. மிகச்சிறிய அப் பரி சோதனைக்கூடம் உண்மையில் ஒரு ஆட்டுக் கொட்டகைபோலவே காட்சியளிப்பது இங்கு குறிப்பிடத் தக்கது.

இவை தொடர்பாக வைத்திய அதிகாரி டாக்டர் அம்பிகைபாலனி டம் கேட்டபோது அவர் பின்வரு மாறு தெரிவித்தார். 2000ஆம் ஆண டில் ஏற்பட்ட பாரிய யுத்தம் காரண



யுத்தத்தில் சேதமடைந்த ஆஸ்பத்திரி

மாக இவ்வைத்தியசாலை முற் றாக சேதமடைந்து இருந்தது. அப் போது எந்த அரச நிறுவனமோ அல்லது அரச சார்பற்ற நிறுவனமோ இவ்வைத்தியசாலையைப் புனர மைக்க எவ்வித உதவியும் செய்ய வில்லை. 2002இல் மக்கள் இங்கு மீளக் குடியமர்ந்த பின்னர் தான் அவர் மீள் நியமனம் பெற்று இங்கு வந்ததுடன் வைத்தியசாலையில் இருந்த ஒருசில ஊழியர்களின் உதவியுடன் வெளிநோயாளர் விடுதி ஒன்றை அமைத்ததாகவும் அது உடைந்த பலகைகள் தடிகள் போன்றவற்றைக் கொண்டு அமைக கப்பட்ட தற்காலிகமான ஒரு விடு தியே என்றும் தெரிவித்தார். அதன் பின்னர் சாவகச்சேரி வர்த்தக சங் கமே ஒரு தற்காலிக விடுதியை அமைத்து தந்ததாகவும், தண்ணீர் பிரச்சனையை சமாளிக்க அன்பர் ஒருவர் மோட்டார் ஒன்றையும் இன்னொருவர் பைப்லைனையும் அன்பளிப்பு செய்ததாகவும் குறிப் பிட்டார்.

இவை நடைபெற்று 3 வருடங் கள் முடியும் இந்நிலையிலும் இவ் வைத்தியசாலையின் தேவைகள் இன்னும் தீர்க்கப்படாமலேயே இருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

ஆனாலும் அண்மையில் இங்கு 42 படுக்கைகள் கொண்ட ஒரு பிரசவ விடுதி திறந்துவைக்கப்பட் டமையும், 50ஆயிரம் ரூபா செல வில் வைத்தியசாலை அபிவிருத்தி சபையினால் நோயாளர்களை பரி சோதிக்கும் இரு அறைகள் திறந்து வைக்கப்பட்டமையும் பசித்தவனுக்கு ஒரு பிடி கவளம் சோறுபோல்அங் குள்ளவர்களுக்கு ஆறுதல் தரும் ஒரு விடயம். அவ்விரு அறைகளி லும் யாழ்.போதனா வைததியசாலை யில் இருந்து ஒரு புற்றுநோய் வைத்திய நிபுணரும் முறிவுநெரிவு வைத்திய நிபுனரும் கிழமையில் 2,3 தடவை நோயாளர்களைப் பார்



வைத்தியசாலை முன்பக்கம்

வையிட வருகின்றமை இங்கு குறிப் பிடத்தக்கது.

ஆனால்' இங்குவரும் வைத்தி யர்கள் தங்குவதற்கு இடவசதி இல்லாமை இங்கு வரநினைக்கும்



வைத்தியசாலையின் ஆண்கள் விடுதி

வைத்தியர்களைக்கூட வரவிடா மல் தடுக்கின்றது. இங்கு வேலை பார்க்கும் மற்றைய ஊழியர்களுக் கும் இதே நிலைதான் என்பது இங்கு 'வருத்தத்துடன் குறிப்பிடப்பட வேண்டிய ஒரு அம்சமாகும்.

-அண்மையில் நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ் நவீனவசதி கள் கொண்ட கட்டில் ஒன்றையும் இதற்கு முன்னர் ஜெனரேட்டர் ஒன்



வைத்திய சாலையின் தற்போதைய ஆய்வுகூடம்

றையும் அன்பளிப்பு செய்தமையும் FIDR என்ற ஜப்பான் நிறுவன மொன்று சிறுவர்களுக்கான விடுதி ஒன்றை அமைக்கும் பணியை ஆரம்பத்துள்ளமையும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வாழ் அன்பர் கள் செய்திருந்த சில மருத்துவ

**வில்சன் ஜோன்சன் சுரேஸ்**

உபகரணங்களை நன்கொடை யாக வழங்கியிருந்தமையும் இங் குள்ள மக்கள் மனதில் பால் வார்த்த விடயங்கள்.

ஆனால் மேற்குறிப்பிட்ட எத் தனையோ தேவைகள் நிறைவேற் றப்படாமல் இருப்பது மக்கள் மன தில் பெரும் சஞ்சலத்தையும் சங் கடத்தையும் ஏற்படுத்தியிருக்கின் றது. ஏனைய வேலைகளுக்கும் நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக அண் மையில் சிறுவர்களுக்கான விடுதி அமைக்கும் பணிக்கான அடிக்கல் நாட்டு விழாவில் சம்பந்தப்பட்ட

**செய்திக் கட்டுரை**

அதிகாரிகள் தெரிவித்த போதும் யுத்தத்தின் பீதியில் நாடு மூழ்கிக் கொண்டிருக்கும் இந்நேரம் இவை யெல்லாம் எப்போது கட்டிமுடிக் கப்படுமோ என்ற ஏக்கமும் எதிர் பார்ப்பும் மக்கள் மனதை ஆக்கிர மித்திருக்கின்றன.

## உ வாரங்களுக்குள் மின் இணைப்புக்கள்

(கொழும்பு)

இரண்டு வாரங்களுக்குள் புதிய மின் இணைப்புக்களை வழங்கத் தவறும் மின்சார அதிகாரிகளுக்கு எதிராக மின்சக்தி எரிசக்தி அமைச்சு ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கவுள்ளது.

புதிதாக மின் இணைப்புக்கு விண்ணப்பித்தவர்களுக்கு இரண்டு வாரங்களுக்குள் மின் இணைப்பை வழங்குவதற்கான வசதிகள் மின் சார சபையிடம் இருப்பதாக மின் சக்தி எரிசக்தி அமைச்சர் ஜோன் செனவிரட்ன தெரிவித்துள்ளார்.

எனினும் பல பிரதேசங்களில் புதிய மின் இணைப்புக்களை வழங்க பல மாதங்கள் செல்வ தாக அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

இதன் காரணமாகவே புதிய மின்னிணைப்புக்களை வழங்க தாமதிக்கும் அதிகாரிகளுக்கு எதி ராக நடவடிக்கை எடுக்கத் தீர்மானித் ததாக அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை தேசிய மின் உற் பத்தியில் 17 வீதம் அன்றாடம் விரயமாவதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

(த-9)

## இலவச வகுப்பு

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் யாழ்.பிராந்திய அலுவலகம் நடாத்தும் ஆண்கள்,பெண களுக்கான யோகாசனம், பண்ணிசை, மிருதங்கம், வயலின் வகுப்புக்கள் நாவ லர் மணி மண்டபத்தில் நடைபெற வுள்ளது. இவ் வகுப்புக்கள இலவச மாக நடைபெறுகின்றது. ஆர்வமுள் ளவர்கள் பங்கு கொண்டு பயன் பெறலாம். பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்பவர்களுக்கு திணைக்களத் தினால் சான்றிதழ்கள் வழங்கப்படும்.

இதற்கான பதிவுகளை எதிர் வரும் 10ஆம் திகதிக்கு முன்னர் நாவலர் மணி மண்டப ஊழியரிடம் தங்கள் பதிவுகளை செய்துகொள்ளு மாறு கேட்கப்பட்டுள்ளது. (த-132,133)

## உடனடியாக பேச்சுவார்த்தை ஆரம்பிக்க டிலான் பெரேரா வேண்டுகோள்

(கொழும்பு)

சமாதான பேச்சுவார்த்தை நடத தப்பட வேண்டிய இடம்தொடர் பான வாத, விவாதங்களைத் தவிர்த்து உடனடியாக பேச்சுவார்த்தை ஆரம் பிப்பதற்கு கவனம் செலுத்தப்பட வேண்டுமென பிரதியமைசசர் டிலான் பெரேரா தெரிவித்துள்ளார்.

சமாதான பேச்சுவார்த்தை நடத்துவதற்கு தெரிவு செய்யப்பட் டுள்ள நாடுகள் தொடர்பாக இரு தரப்பினர்களுக்கும் இணக்கப்பட் டிற்கு வரமுடியாவிடின் தென்னா பிரிக்க நாடென்றையாவது அதற் காக தெரிவுசெய்ய வேண்டுமென அவர் கேட்டுள்ளார்.

அவ்வாறு இல்லையெனில் மீண்டும் யுத்தசூழல் ஏற்படும பட் சத்தில் அனைத்துத்தரப்பினர்களும் இன்னல்களை எதிர்நோக்க நேரிடும்.

ஆயுதம் ஏந்திய அமைப்புக்க ளின் தேவைகளுக்கு ஏற்ற வகை யில் அன்றி நியாயப்பத்திரம் தயா ரிக்கப்படுவதில் கவனம் செலுத் தப்படவேண்டுமென அவர் மேலும் கேட்டுக்கொண்டுள்ளார். (9)

# நடிகர் திலகம்

## செவாலியே டாக்டர் சிவாஜி கணேசன் அவர்களின் சுயசரிதை

9 மீள்பார்வை


பாட்டும் பரதமும் படத்தில்...

சிவாஜி: நான் இப்பொழுது உங்களுடன் சாதாரணமாகப் பேசிக் கொண்டிருக்கிறேன். நான் மேக்கப்போட்டு மீசை தாடியெல்லாம் வைத்துக்கெண்டு வந்தால் குரல் தடித்து வித்தியாசமாக மாறிப போய்விடும். அபபொழுதே குரலை மாற்றிப் பேசுவதெல்லாம் சகஜமாக இருந்தது மகரக் கட்டு என்று கூறுவார்கள் . சிறு வயது பிள்ளைகளுக்கெல்லாம் அது வரும் . பத்துப் பதினைந்து வயதில் தொண்டை யின் குரல் வளம் மாறும் அது எனக்கு வந்ததும் தெரியாது போனதும் தெரியாது.

ஆகையால் எனக்குக் குரல் மாற்றிப் பேசுவ தெல்லாம் சகஜமாகப் போய்விட்டது.

நாடகக் கம்பனியிலேயே டாபரேங்க என்கிற பெயர் எனக்கு கிடைத்தது. குரல் பயிற்சியை நான்மேடையில் ஒரு யோகா மாதிரியே செய்து பழகிக்கொண்டேன். அதனால்தான என்னை பலரும் பிற்காலத்தில் சிம்மக்குரலோன் என்று அழைத் தார்கள்.

### நாடகக்குருகுலம்



டி.எஸ்.என்:அந்தக் காலத்தில் பொது வாக பாய்ஸ்கம்பெனி

அல்லது பால் கான சபா என்றால் அது ஒரு குருகுலம் மாதிரி நடந்தது என்று சொல்வர்கள். உங்கள் நாடக குருகுலம் என்பது எப் படி நடந்தது?

சிவாஜி: என்னுடைய தலைமுறை மிகவும் நல்ல தலைமுறை என்னுடன் மதுரை ஸ்ரீபாலகான சபாவில் இருந்தவர். டி.ஆர். மகாலிங்கம். அந்தக் காலத்தில் நமது இந்தியாவிலேயே இண்டு அல்லது மூன்று பேர்தான் பெரிய பாடகர்களாக இருந்தார்கள். ஒன்று மராட் டியத்தில் இருந்த பாலகந்தர்வா. அடுத்தது தமிழ் நாட்டில் கிட்டப்பா அவருக்கு அடுத்தது டி.ஆர்.மகாலிங்கம் அவர் என்னுடன் தான் இருந்தார். இதைக் கூறுவதில் எனக்குப் பெருமை. அதைவிடப் பெருமைதரக் கூடியது நடிகவேள் ஏம்.ஆர்.ராதா அவர்களும் என்னோடு இருந்தார் என்பதுதான்.இப்படிப் பல நடிகர்கள் அபபோது என்னுடன் இருந்தார்கள்.

நாடகக் கம்பெனி என்பது உயர்ந்த குரு குல வாசம் அந்தக் கலத்தில் குரு குலத்தில் ஸ்ரீராமர் படித்திருக்கிறார். பாண்டவர்கள படித்திருக்கி றார்கள் என்று பல கதைகள் நாம் புராணங்களில் படித்துத் தெரிந்து கொண்டிருக்கிறோம் .அதற்கு எந்த வகையிலும் குறைந்தது. அல்ல. என்னுடைய குருகுலவாசம்.

காலை ஏழு மணிக்கு எழுப்பிவிடுவார்கள். எழுந்ததுவுடன் குளித்துவிட்டு சாமிகும் பிட வேண்டும் அதன் பிறகு முதலில் பாட்டு இரண்டாவது டான்ஸ் அடுத்தது அன்று நடக்க இருக்கின்ற நாடகத்திற்கு வேண்டிய உரையாடல்களுக்கு ஒத்திகை . ஆட வேணடும் பாட வேண்டும் பேச வேணடும் எல்லாமே செய்ய வேணடும் .எனக்குப் புத்தகப் புழு என்று பெயர் ஏனென்றால் நான் நாடகப் பாடப் புத்தகத்தை எப்பொழுதும் கையில வைத்துப் படித்துக் கொண்டிருப்பேன்.

நான் சாஸ்திரபூர்வமாக நாட்டியமாடுவேன். பாடுவேன் நாடக சம்பந்தமான எல்லாமே தெரியும். அதனால்தான். பிற்காலத்தில் படங்களிலெல்லாம் நடனமாடியிருக்கிறேன. எங்களுக்கு நாடகக் கம்பெனியில் இருக்கும்போது கடுமையான பயிற்சி கொடுத்தார்கள. இவ்வளவ்வு நடிக்கவும் பேசவும் பாடவும் பயிற்சி இருக்கும்போது நல்ல சாப்பாடு கிடைக்கும் என்று நினைக்கிறீகளா? இல்லை. அதாவது முழுச் சாப்பாடு என்று சொல்வார்களே ஒரு சாம்பார் ஒரு ரசம்ஒரு மோர் இரண்டு பதார்ததம்அது போலெல்லாம் எங்களுக்குக் கிடைக்காது ஒரு வேளைக்கு ஒரு ரசம் சாதம் அல்லது ஒரு மோர் சாதம்தொட்டுக்கொள்ள ஒரு பப்படம் இவ்வளவுதான் இருக்கும். இதைச் சாப்பிட்டுவிட்டு வறுமையில் இருக்கும் நாங்கள் ராஜா மாதிரிசத்தம் போட்டு பேசி மேடையில் நடிக்க வேண்டும் . ஏனென்றால் நாடகம் பார்க்க வருகின்றவர்களுக்கு எப்படி நம் வறு மையை கூறுவது? சாப்பாடு முக்கியமல்ல தொழில்தான் முக்கியம் என்பதைக் கற்றுக்கொடுத்தது குருகுலம் தான்.

இப்பொழுது உள்ள குழந்தைகள் கான்வென்டு என்று கூறிக்கொண்டு பெரிய புத்தக மூட்டைகளை முதுகில் தூக்கிக்கொண்டு செல்கிறார்கள். முன்பெல்லாம் கையில இரண்டு புத்தகம் மட்டும் எடுத்துக்கொண்டுபோவார்கள் ஆனால் நன்றாகப் படிப்பார்கள் இப்பொழுது பெரிய மூட்டை சுமந்தும்முழுமையாகக் கல்வி பெறுவதில்லை. புத்தகங்கள்படிப்பதால் மட்டும் படிப்பு வருவதில்லை. குருகுல வாசம் மாதிரி இருக்க வேணடும். எல்லாமே கட்டுப்பாட்டுடன் இருக்க வேண்டும் . அதனால் குருவுக்கு நீங்கள் துணி துவைத்துப்போட வேண்டும் என்று நான் சொல்லவில்லை. குரு என்ன சொல்கிறார்? என்பதை கிரஹிக்க வேண்டும்.

படிக்கும் பிள்ளைகளுக்கு குரு பக்தி வேண்டும் . அப்பா அம்மாவையே மதிக்காத இந்தக் காலத் தில் குரு பக்தியை பற்றிக் கூறினால் பைத்தியக்காரன் என்று நினைப்பார்கள் மறுபடியும் சொல்கிறேன் யார் என்ன சொன்னாலும் பரவயில்லை பிள்கைள பெற்றோர்களை மதிக்க வேண்டும் குரு பக்தி பூரணமாக வேண்டும் அப்பொழுதுதான் வாழ்க்கை நன்றாக இருக்கும் குரு பக்தி இருந்த தனால் தான் நாட்டில் சில பேர்களாவது நன்றாக வாழ்கிறார்கள்.

நாங்கள் அந்த குருகுலத்தில் இருந்துகொண்டு ஊருக்கு போகவேணடும் நமது அப்பா அம்மாவைப் பார்க்க வேண்டும்லெட்டர் எழுத வேணடும் என்றெல்லாம் நினைக்க முடியாது அக் காலத்தில் நமக்கு இருந்த போக்குவரத்தெல்லாம் மிகவும் குறைவாகவே இருந்தது. எப்பொழுதவாது ஒரு தடவை அம்மா அப்பாவுக்கு கடிதம் எழுதுவோம் அது மாதிரி எப்போதாவது வீட்டிலிருந்து கடிதம் வரும்அந்தக் கடிதத்தை முதலாளிகள் படித்த பிறகு தான் நம்மிடம்கொடுப்பார்கள் ஏனென்றால அக்கடிதத்தில் ஊருக்கு வா என்று எழுதியிருந்தால் அதை எங்களிடம் கொடுக்கமாட்டார்கள்.

(தொடாரும்)

## உயிர் காக்க உதவுக!



கைதடி தச்சன் தோப்பைச் சேர்ந்த வி.யசிந்தன் எனும் 11 வயதுச் சிறுவனுக்கு NEO BLADDER CONSTRVCTION சத்திர சிகிச்சை செய்யவேண்டியுள்ளது.

இதனை விரைவில் செய்து கொள்ளுமாறு கொழும்பு அப்பலோ வைத்தியசாலை சிபாரிசு செய்துள்ளது. இதற்கு 2 இலட்சம் ரூபா நிதி தேவைப் படுகின்றது. வறுமைக் கோட்டின் கீழ் வாழும் இந்தக் குடும்பத்தால் இந்தச் செலவை ஏற்க முடியாததால் சாவகச்சேரி லயன்ஸ் கழகம் பொது மக்களின் உதவியை நாடியுள்ளது. இந்தச் சிறுவனைக் காப்பாற்ற பண உதவி வழங்குமாறு கொடை வள்ளல்களை இக் கழகம் கோரியுள்ளது.

எனவே இச் சிறுவனின் உயிர்காப்புக்கு நிதியுதவி அளிக்க விரும்புவோர் சாவகச்சேரி மக்கள் வங்கிக் கிளையில் 257-024535 -2 எனும் சேமிப்புக் கணக்கு இலக்கத்தில் தமது நிதியை வைப்புச் செய்யுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ற)

சாவகச்சேரி மடுப்பதி, கண்டி வீதியைச் சேர்ந்த பா.ரோயல்குமார் என்ற 22 வயது இளைஞன் APLASTIC ANAEMIA என்ற நோயால் பீடிக்கப்பட்டுள்ளார்.



இதற்கான எலும்பு மஜ்ஜை மாற்றீட்டுச் சத்திர சிகிச்சையை மேற்கொள்வதற்கு ரூபா 22 இலட்சம் போன்ற பெரும் தொகை தேவைப்படும் எனவும் அதற்கு மாற்றுச்சிகிச்சையான ANTGHYMO CYLE GLOBULIN CYCLOSPORINE ஆகிய மருந்துகளைப் பயன்படுத்த வேண்டும் எனவும் யாழ். போதான வைத்தியசாலை அறிவித்துள்ளது.

இந்த மருந்துகளின் கொள்வனவுக்கும் ரூ.12,50,000 தேவைப்படுவதாக யாழ். போதான வைத்தியசாலை வைத்திய நிபுணர் டாக்டர் சிவசுதன் அறிவித்துள்ளார்.

வறுமைக் கோட்டின் கீழ் வாழும் இந்தக் குடும்பத்தால் இந்த மருந்துக்ளைப் பணம் கொடுத்து வாங்குவது இயலாத காரியம் ஆகையால் இந்த இளைஞனைக் காப்பாற்றப் பண உதவி வழங்குமாறு சாவகச்சேரி லயன்ஸ் கழகம் தர்மப்பிரபுக்களை கேட்டுள்ளது.

எனவே இவ் இளைஞனின உயிர்காப்புக்கு நிதியுதவி அளிக்க விரும்புவேர் சாவகச்சேரி மக்கள் வங்கிக் கிளையில் 207-024534-0 எனும் சேமிப்புக் கணக்கு இலக்கத்தில் தமது நிதியை வைப்புச் செய்யுமாறு கேட்கபபட்டுள்ளது. (ற)

## கைதிகளின் புனர்வாழ்வுக்கு விஷேட நடவடிக்கை

(கொழும்பு)

சிறைக்கைதிகளுக்கு புனர்வாழ்வு அளிக்கவும் சமூகத்தில் அவர்களை மீண்டும் இணைத்துக் கொள்ளவும் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமென்று சிறைச்சாலை ஆணையாளர் நாயகம் புறுமி மர்சூத் தெரிவித்துள்ளார்.

சிறைவாசம் அனுபவிக்கையில் சிறு குற்றச் செயல்களைப் புரிந்து ச்சிறைத்தண்டனை பெற்ற நபர்கள் தீவிர சிறைக்கைதிகளுடன் பழகக் கூடிய தருணம் ஏற்படுவதனால் சிறு குற்றச் செயபல்களைப் புரிந்தவர்கள் விடுதலை பெற்றதும் பாரிய குற்றச் செயல்களைப் புரிவதற்கு தூண்டப்படுகின்றனர். என்று தெரியவந்துள்ளது.

இத்தகைய நிலைமைக்குத் தீர்வுகாணும் வகையில் புனர்வாழ்வு நடவடிக்கைகள் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு பயிற்சி பெற்ற அதிகாரிகள் சேவைக்கு அமர்த்தப்பட்டுள்ளனர்.

அதேசமயம், சிறைக்கைதிகளின் தொழில் திறனை அபிவிருத்தி செய்வதற்கும் திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ற-9)

## விவசாய போதனா ஆசிரியர் இல்லை வடமராட்சியில் விவசாயிகள் சிரமம்

(மருதங்கேணி)

வடமராட்சி பிரதேசத்தின் இரு விவசாய பிரிவுகளான பருத்தித் துறை, கரவெட்டிப் பிரதேசங்களுக்கு விவசாய போதனாசிரியர் இன்றி விவசாயிகள் பெரிதும் சிரமம்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

முன்னர் இவ்விருவிவசாய பிரிவுகளுக்கும் ஒருவர் மட்டுமே இருந்து வந்தார். இந்நிலையில் விவசாய போதனாசிரியர் வி.பாலசுப்பிரமணியம் பதவி உயர்வு பெற்று சென்றுள்ளதால் இவ் இருபிரதேசங்களில் விவசாய போதனாசிரியர் இன்றி விவசாயிகள் தமது பிரச்சினைகளை தீர்ப்பதற்கு பெரிதும் சிரமம்படுவதாக தெரியவருகிறது.

எனவே சம்பந்தப்பட்டோர் இது தொடர்பில் உரிய கவனம் எடுத்து விவசாய போதனாசிரியர் ஒருவரை நியமிக்குமாறு விவசாயிகள் சார்பில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதேநேரத்தில் வடமராட்சி கிழக்குப்பிரதேசத்திற்கும் நிரந்தர விவசாயப் போதனாசிரியர் இன்றி அப்பகுதி விவசாயிகள் சிரமப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ற-35)

## எழுத்தாளர்களுடனான சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் உள்ள சகல எழுத்தாளர்களையும் தமிழ் செய்தி தகவல் மையம் ஒருங்கிணைத்து அவர்களது அனுபவம், ஆற்றல், ஆக்கங்கள் தொடர்பாக ஆலோசனை கேட்க விரும்புகின்றது.

செய்தித் தகவல் மையம் மேற்கொள்ளவிருக்கும் இவ் அறிவியல் பணிக்கு சிரமத்தினைப் பாராது எழுத்தாளர்களை இன்று புதன்கிழமை காலை 10 மணிமுதல் பிற் பகல் 3 மணிவரை இல.180 பருத்தித்துறை வீதியில் அமைந்துள்ள தமது அலுவலகத்திற்கு வருகை தருமாறு தமிழச் செய்தித்தகவல் மையம் கேட்டுள்ளது. (ற)

# கற்பென்று கூற வந்தால்...

'கைப்பிடித்த கணவனைத் தவிர தெய்வம் வேறில்லை என்று எண்ணி, அவனை வழிபட்டு வாழ்வது தான் கற்பு. நாள்தோறும் வீடு பெருக்கி, பசுவின் சாணத்தால் வீடு மெழுகி கோலமிட்டு வீட்டு வேலைகள் அனைத்தும் செய்து கணவனுக்கு உணவு சமைத்து அவன் உண்டபின் உண்டு, அவன் உறங்கிய பின் உறங்கி, அவன் எழுவதற்கு முன் எழுந்து, அவனிட்ட கட்டளைகளை இன்முகத்துடன் நிறைவேற்றி அவனுக்காகவே வாழ்வதுதான் கற்புடைய பெண்ணுக்கு அழகு'' என்கிறது அபிதான சிந்தாமணி.

ஆதி மனிதர்கள் கூட்டங் கூட்டமாகச் சென்று விலங்குகளை வேட்டையாடினர். வேட்டை உணவை அங்கேயே அனைவரும் பகிர்ந்து கொண்டனர். ஒவ்வொரு கூட்டமும் ஒவ்வோர் இனக்குழுவாக உருவெடுத்தது. அந்த இனக்குழுவுக்கு இரத்த உறவே அடித்தளமானது. 'ஒவ்வொருவரும் அனைவருக்குமாக அனைவரும் ஒவ்வொருவருக்குமாக' என்னும் வாழ்க்கை முறையே நாளடைவில் ஒழுக்கமானது. குழு மணங்களும் பொதுமைப் பாலுறவும் நியதியாயின. பெற்றவள் பெருமைப்படுத்தப்பட்டாள். தாய் வழிச் சமுதாயம் மலர்ந்தது. இப்போதைய கற்பு குறித்த பிரக்ஞை அப்போது இல்லை.

> கற்பு என்றால் என்ன என்பதற்கு இதுவரை சரியன வரைவிலக்கணம் கூறப்படவில்லை. 'கற்பெனப்படுவது சொற்றிறம்பாமை' என ஔவையார் கூறியது கூட காலத்துக்குப் பொருத்தமில்லாததாகவே காணப்படுகிறது. மனதினால், வாக்கினால் மாசுபடுவது கூட கற்புக்கு ஏற்படும் களங்கமாகவே கருதப்படுகிறது. ''பிறர் மனம் புகாத கற்பினாள்'' என்று கற்பின் மாண்பை பழந்தமிழ் இலக்கியங்கள் எடுத்துக் கூறுகின்றன. 'இப்பிறப்பென்பதொன்றும் இரும்பொறை என்பதொன்றும், கற்பெனப்படுவதொன்றும் களிநடம் புரியக்கண்டேன்' என்ற அனுமான் வாய் வாசகம் சீதையின் கற்பின் திண்மைக்கு உதாரணமாக அமைகின்றது.

கால ஓட்டத்தில் நாகரிக மாற்றம் நிகழ்ந்தது. வேட்டைச் சமுதாயம் வேளாண்மைச் சமுதாயமானது. கால்நடை வளர்ப்பில் ஆடவர் ஆதிக்கம் தலையெடுத்தது. ஆதிப் பொதுவுடைமைச் சமுதாயம் அழிந்து தனிச் சொத்துரிமைச் சமுதாயம் தோன்றியது. தான் உழைத்துச் சேர்த்த சொத்து தனக்கு மட்டுமே; உடன்பட்டவளுக்குத் தன்னால் பிறக்கும் பிள்ளைகளுக்குப் போய்ச் சேரவேண்டுமென்ற உடைமை விருப்பம் ஆணின் உள்ளத்தில் உருவெடுத்த போது தான் கற்பு என்ற கருத்தேற்றத்துக்குக் கால் முளைத்தது. பெண்ணை அடிமைப்படுத்திய நிலவுடைமைச் சமுதாயத்தின் சிந்தனையில் விளைந்தது தான் கற்பென்னும் சித்தாந்தம்.

> ''சாத்தான் வேதமோதுகிறது'' என்பதைப் போல சினிமா நடிகைகள் தமிழ்ப் பெண்களின் கற்பொழுக்கம் பற்றி ஆலோசனை கூற முனைவது தமிழர்களைப் பற்றி யாரும் எதுவும் பேசலாம் என்ற நிலைப்பாட்டுக்கு இடப்பட்ட அத்திவாரம். அதுவும் தமிழகத்திலே பிறவாத தமிழ்மொழி யைத் தாய் மொழியாகக் கொள்ளாத நடிகை தமிழ்ப் பெண்களின் கற்பைப் பற்றிப் போதனை செய்வது கற்புக் கனல் கண்ணகி பிறந்த தமிழ் நாட்டுக்கே களங்கம்.

தனிச் சொத்துரிமை வேரூன்றிய சமுதாயத்தில் தலைவன், தலைவி, மகன், மகள் சேர்ந்து வாழும் குடும்பம் பிறந்தது. திருமணம் என்ற வாழ்க்கை ஒப்பந்தம் தனி மனித வாழ்வில் தவிர்க்க முடியாத இடத்தைப் பெற்றது. ஒருத்தி ஒருவனோடு மட்டுமே காலம் முழுவதும் உடன்பட்டு வாழ்வதே பெண் கற்பு என வரையறுக்கப்பட்டதே தவிர ஒருவன் ஒருத்தியோடு மட்டும் உயிராகக் கலந்து இறுதிவரை வாழ்வதே ஆண் கற்பு என்று ஏந்த வரையறையும் தொன்றுதொட்டு இன்றுவரை கடைப்பிடிக்கப்படவில்லை.

ஓர் ஆடவன் பல பெண்களுடன் வாழ்ந்ததைப் போன்றே ஒரு பெண் பல ஆண்களுடன் சேர்ந்து வாழ்ந்ததை மகாபாரதம் சொல்கிறது. திரௌபதியின் தந்தையாகிய துருபதனிடம் தருமன் 'உடன்பிறந்த நாங்கள் ஐவரும் உங்கள் மகள் திரௌபதியை மணந்து வாழ விரும்புகிறோம்' என்று தெரிவித்ததும் அதிர்ச்சியுற்ற துருபதன் ஒரு பெண் பல ஆண்களை மணந்து வாழ்ந்ததை இதுவரை நான் கண்டதும் இல்லை. கேட்டதும் இல்லை. ஒருத்தி பலருக்கு மனைவியாவது அதர்மமான பாவ காரியம். அதை என்னால் ஏற்க முடியாது' என்று கோபத்துடன் மறுக்கிறான்.

'நீண்ட காலத்துக்கு முன் ஜடிலை என்பவள் ஏழு ஆண்களை மணந்து வாழ்ந்தாள். வார்ஷி என்பவர் ஒரே நேரத்தில் பத்து சகோதரர்களுடன் இல்லறத்தில் ஈடுபட்டாள். அதனால் நாங்கள் ஐவரும் திரௌபதியை மணப்பது தவறாகாது என்று தன் பக்க நியாயத்தை நிறுவ முயல்கிறான் தர்மன். அப்போது வியாசர் குறுக்கிட்டு 'மானிட மகளிர் ஒருவ்ரை மணப்பதே நியது. ஆனால் திரௌபதி இலக்குமியின் அம்சம். அவள் ஐவரை மணக்க வேண்டும் என்பது சிலன் விதித்த விதி. அதனால் தருமன் சொல்வதை ஏற்கலாம் ஆனாலும் சாதாரண மனிதர்களுக்கு இது தர்மமாகாது' என்றார். அதன்பின் பாண்டவர் - திரௌபதி திருமணம் நடந்ததாகப் பாரதம் சொல்கிறது.

### மானுட தர்மமும் மனு தர்மமும்

'ஒருத்தி ஒருவனை மணந்து வாழ்வதே மானுட தர்மம்' என்று விளக்கிய வியாசர் ஒருவன் ஒருத்தியோடு மட்டுமே வாழ வேண்டுமென்று வேதம் சொன்னதாக விதி எழுதவில்லை. பெண் கற்புக் குறித்துப் பெருமையுடன் பேசும் தமிழர் சமுதாயமும் ஆண் கற்பைப் பற்றி அதிகம் சொல்லவில்லை. தொல்காப்பியர் காலத்திலேயே ஒருவன் பல பெண்களுடன் தொடர்பு கொண்டு இருந்தது பற்றிய குறிப்புக் காணக் கிடக்கிறது. 'ஒரு குலத்துக்கு ஒரு நீதி' கூறும் மனுதர்மம் கூட கற்பைப் பற்றி அலட்டிக் கொண்டதாகத் தெரியவில்லை.

சிலப்பதிகாரத்தில் தன் கணவன் குற்றம் அற்றவன் என்று நிரூபிப்பதற்கு 'காவியுமிழ் கண்ணும் கையிற் தனிச் சிலம்புமாக' அரசசபைக்குள் நுழைந்து பாண்டியனிடம் தன் வரலாற்றை விளக்கும் கண்ணகி' ஏழு கற்புடை மகளிரைப் பற்றிக் குறிப்பிடுகிறாள். கணவன் பிரிந்து சென்றதும் தன் முக அழகில் மாற்றான் ஈடுபாடு கொள்ளக் கூடாது என்பதற்காகத் தன் முகத்தைக் குரங்கு முகமாக மாற்றிக் கொண்டவளையும்' கணவன் வரும் நாள் வரை கல்லுருவில் காத்துக் கிடந்தவளைப் பற்றியும் பெருமிதமாகப் பேசுகிறாள் கண்ணகி. ஆனால் மனைவியின் பிரிவில் அவளையே நினைந்து உருகி அவளுக்காகவே கரைந்து போன கற்பார்த்த ஆண்களின் பட்டியலை இளங்கோ அடிகளால் வெளிப்படுத்த முடியவில்லை.

கற்புடைய பெண் என்பதற்கு அடையாளம் அவளைப் பார்க்கும் எந்த ஆணில் செஞ்சிலும் தவறான எண்ணம் தோன்றாமல் இருப்பது தான் என்கிறது மணிமேகலை. மருதி என்ற பார்ப்பனப் பெண் நீராடிய நிலையில் இளவரசன் சுகந்தன் அவளைக் காமத்துடன் நோக்குகிறான். 'மண்ணுக்கு மழை வளம் தரும் பெண்ணாக இருந்தால் அவள் பிறர் நெஞ்சு புக மாட்டாள். ஓர் ஆணின் இதயத்தில் காமம் கிளர்ந்து எழுவதற்கு நான் காரணம் ஆனதால் என் கற்பு களங்கம் உடையது' என்று மருதி மனம் கலங்குவதாக மணிமேகலை கூறுகிறது. பெண்ணுக்குக் கற்பின் பெயரால் இழைக்கப்பட்ட பெரும் கொடுமை அல்லவா இது!

> தமிழ் மக்களது வீரத்தைப் பற்றியும் தமிழ் மங்கையரின் கற்பைப் பற்றியும் இகழ்ந்து பேசிய வடபுல மன்னர்களான கனக- விஜயர் செருக்கடக்கத் தண்டெடுத்துச் சென்று அவர்கள் தலையிலே பத்தினித் தெய்வம் கண்ணகிக்குச் சிலைவடிக்க கல்லேற்றி வந்த செங்குட்டுவனை தமிழர்கள் மறந்து விட்டார்களா?
>
> ''தமிழர் தம் பெருமை இகழ்ந்தவனை என் தாய் தடுத்தாலும் விடேன்'' என்ற பாவேந்தர் பாடலும் காற்றோடு காற்றாய் கரைந்து விட்டதா?

பல பரத்தையருடன் ஓர் ஆண்மகன் உறவு கொண்டதை எதிர்த்து இலக்கியம் படைத்த முதல் மனிதர் வள்ளுவர். ஆணுக்கும் பெண்ணுக்கும் கற்பைப் பொதுவாக்கிப் பார்த்த முதற் புரட்சியாளர் அவர். அன்றைய ஆணாதிக்க சமூகத்தின் செல்வாக்கில்' கணவனை மட்டுமே கடவுளாக வணங்கிய 'தெய்வக் கற்பு' பற்றி அவர் பேசினாலும் அடுத்தவர் மனைவியை நாடும் மனிதர்களை நல்வழிப்படுத்த 'பிறனில் விழையாமை'யும் பரத்தையர் தொடர்பைக் கட்ட றுக்க விரைவின் மகளிரையும் அழுத்தமாக எடுத்துரைத்தார்.

> குழல் வாரி, பூச்சூடி, நெற்றியில் குங்கும திலகம் துலங்க காஞ்சிபுரம் பட்டுடுத்து வரும் பெண்களைக் காணும் எவருக்குமே காம உணர்வு ஏற்படாது. கையெழுத்துக் கும்பிட வேண்டுமென்ற தெய்வீக உணர்வுதான் ஏற்படும்.
>
> ஆனால் இன்று வெளிநாட்டு நாகரிகத் தாக்குதலுக்கு ஆளான இளம் பெண்கள் அணியும் ஆடைகள் நல்லவனைக் கூடக் காமுகனாக மாற்றுவனவாக அமைந்துள்ளதுதான் கொடுமை.

ஆணின் கற்பை அறத்துடன் நெறிப்படுத்த அவர் தான் முதலில் முயன்றார். அவருடைய வழியில் பின்பு வந்து சேர்ந்தார் கம்பர். மருத நிலத்தையும்' மக்கள் வாழ்க்கை முறையையும் 14 பாடல்களில் விரிவாக விளக்கும் கம்பர்' மறந்தும் மருதத்திணைக்குரிய பரத்தையர் பற்றி ஒரு வார்த்தையும் பேசவில்லை.

ஆணுக்கும் பெண்ணுக்கும் புலனடக்கம் போதிப்பதற்காகவே இராமயணத்தைத் தமிழில் தந்தவர் அவர். அறுபதாயிரம் மனைவியரோடு வாழ்ந்த தசரதனுக்கு மகனாகப் பிறந்த இராமன்' ஒருத்திக்கு ஒருவனாக வாழ்ந்த சிறப்பைச் சொல்ல எழுத்தாணியைக் கையில் எடுத்தார் கம்பர். அசோகவனத்தில் ஆற்ற முடியாத சோகத்தைச் சுமந்தபடி அமர்ந்திருந்த சீதையின் நெஞ்சில் நினைவலைகள் மோதுகின்றன. இராமனின் நற்பண்புகளை மனதில் அசைபோடுகிறாள். கைப்பிடித்த மண நாளில் 'இப்பிறவிக்கு இரு மாதரைச் சிந்தையாலும் தொடேன்' என்று அவன் அளித்த வரத்தை அவள் சிந்தித்துச் சிலிர்க்கின்றாள்.

ஒருவனும் ஒருத்தியுமாக வாழும் வாழ்க்கையை வற்புறுத்தவே கம்பர் காப்பியம் படைத்தார். ஆண் கற்பை அழுத்தமாகப் பேசியவர் அவர்.

'கற்பு நிலை என்று சொல்ல வந்தால் இருபாலாருக்கும் அதைப் பொதுவில் வைப்போம்' என்ற பாரதி பெண்ணுக்குக் கற்பு விலங்கு பூட்டி ஆண் மக்கள் பிற மாதருடன் நெஞ்சழிந்து நிற்பதை காணச் சகிக்காமல் கடுமையாக விமர்சனம் செய்தார். 'அட பரமமூடர்களே! ஆண் பிள்ளைகள் தவறினால் பெண்கள் எப்படி பதி விரதைகளாக இருக்க முடியும்?' என்று கேட்டார். அவர் கேள்விக்குப் பதில் கூற இற்றைவரை எவருமே முன்வரவில்லை.

ஆணாதிக்கம் சுய நலமாக பெண்ணுக்கு கற்பெனும் விலங்கு பூட்டி அடிமைப்படுத்தியது. அந்த விலங்கை உடைத்தெறியும்

**தமிழருவி மணியன்**

வேகத்தில் ஒழுக்கச் சிதைவுக்கு வாசற்கதவைத் திறந்து வைக்கப் பெண்ணியம் பேசுவோர் முனைதல் தகாது. 'பெண்கள் திருமணமாகும் போது கன்னித் தன்மை கலையாமல் இருக்க வேண்டும் என்று சமூகம் எதிர்பார்க்ககூடாது' என்பது பெண்ணியத்தின் போர்க்குரல் அன்று; அது பண்பாட்டுப் பேரழிவின் பிரகடனம்.

வரம்பற்ற காமத்துக்கு வரவேற்பு விழா நடத்தும் திட்டம். இந்த மலினமான சீரழிவுச் சதியில் இளைஞர் கூட்டம் சரிந்து விழலாகாது.

பெண்ணுரிமைக்காக வாழ் நாள் முழுவதும் போராடிய பெருமகன் பெரியார் கூட, தாம் எழுதிய புரட்சிகரமான 'பெண்ணே ஏன் அடிமையானாள்?' என்ற நூலில் திருமணமாவதற்கு முன்பே பெண் கன்னித் தன்மையை இழக்கலாம் என்று பரிந்துரைக்கவில்லை.

திருத்தப்படாத நிலம் களை மண்டிக் கிடக்கும். தடுக்கப்படாத வெள்ளம் தாளாத அழிவைத் தரும். இரண்டு கரைக்குள் அடங்கிக் கிடக்கும் ஆறு தான் நாட்டுக்கு நன்மை பயக்கும். இறுக்கமாகக் கட்டப்பட்ட வீணையின் நரம்புகளில் இருந்து தான் இனிமையான இசை பிறக்கும். சுய கட்டுப்பாடு தான் நாகரீகத்தின் நல்லடையாளம். புலனடக்கம் கொண்ட ஆணும் பெண்ணும் உருவாக்கும் குடும்பத்திலே தான் இன்பமும் அமைதியும் இறுதிவரை நிலைக்கும். கணவனும் மனைவியும் ஒருவருக்கொருவர் உண்மையாக வாழ்வதற்குப் பெயர் தான் கற்பு.

கற்பு பெண்ணுக்கு மட்டும் என்பது ஆணாதிக்கம் பூட்டிய அடிமை விலங்கு. அதையே ஆணுக்கும் சேர்த்து வரையறுத்து ஒழுக்கப் பயிர் காக்கும் வேலியாக்குவோம்.

*நன்றி: ஆனந்தவிகடன்.*

## விடைத்தாள் மீள் மதிப்பீட்டின் பின்

## பல்கலைக்கு மாணவர் அனுமதி

நடந்து முடிந்த க.பொ.த உயர்தரப் பரீட்சையின் சில விடைத்தாள்களின் மதிப்பீடுகள் திருத்தியமைக்கப்பட்ட பின் தாமதமின்றி மாணவர்கள் பல்கலைக்கழகங்களில் சேர்த்துக் கொள்ளப்படவேண்டுமென கல்வியமைச்சர் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.

கல்வியமைச்சர் சுசில் பிரேம ஜயந்த தலைமையில் நேற்று முன்தினம் விசேட பேச்சுவார்த்தையொன்று இடம்பெற்றது.

கடந்த உயர்தரப் பரீட்சையின் பெறுபேறுகளுக்கு ஏற்ப பல்கலைக்கழகங்களுக்கான மாணவர் தெரிவு தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது. கல்வியமைச்சின் ஆலோசனைகளுக்கு அமைய பல்கலைக்கழங்களுக்கு மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவர். என்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுத் தலைவர் பேராசிரியர் றஞ்சித் மென்டிஸ் தெரிவித்தார்.

பரீட்சைத் திணைக்களம் பயன்படுத்திய கணனி இயந்திரத்தில் இடம்பெற்ற கோளாறு காரணமாக இரசாயன விடைத்தாள் மதிப்பீட்டில் குழப்பம் ஏற்பட்டுள்ளது. அதன்படி இரசாயவியல் முதலாவது விடைத் தாளை மீண்டும் பரிசீலிப்பதற்கு பரீட்சைகள் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது. (ற-9)

## விசேட பொதுக்கூட்டம்

யாழ்.மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கத்தின் விசேட பொதுக்கூட்டம் எதிர்வரும் 8ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மு.ப.11.30 மணிக்கு சங்கச் செயலகத்தில் தலைவர் இ.பேரின்பநாயகம் தலைமையில் நடைபெறும். இதில் மா விநியோகம் சம்பந்தமாகவும், சங்கத்தில் தற்போதைய நிலை தொடர்பாகவும் முக்கிய முடிவுகள் எடுக்கவிருப்பதால் சகல அங்கத்தவர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (தி)

மனிதர்கள் இன்னும் பண்பாடு அடைய வில்லை. ஓநாய் கூட்டங்களின் உணர்ச்சி இன் னும் அவர்களி டம் குடிகொண்டிருக்கிறது.

-ப்ராய்டு

# வலம்புரி

## தமிழ் மாணவர்கள் மீது அரசின் மிகப்பெரும் பயங்கரவாதம்

திருகோணமலை பெரிய கடற்கரைப் பகுதியில் நேற்று முன்தினம் இரவு தமிழ் மாணவர்கள் ஐவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர்.

நான்கு மாணவர்கள் காயமடைந்துள்ளனர். காயமடைந்தவர்களின் சாட்சியங்களின் படி படையினரே இத் துப்பாக்கிப் பிரயோகத்தினை மேற்கொண்டதாகத் தெரியவருகிறது.

ஐந்து மாணவர்களைச் சுட்டுக்கொல்லும் அளவில் அரச பயங்கரவாதம் மேலெழுந்துள்ளது. மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாகி பதவியேற்றதிலிருந்து தமிழ்மக்கள் மீதான வன்முறைகளும் கொலைச் சம்பவங்களும் அதிகரித்துள்ளன.

தமிழ்மக்களுக்கு எதிரான போக்குடைய ஜே.வி.பி. மற்றும் ஹெல உறுமய போன்ற கட்சிகளுடன் கூட்டுச் சேர்ந்துள்ள் மகிந்த ராஜபக்ஷ தமிழ்மக்களுக்கு எதிரான கொலைக் கலாசாரத்தை ஆரம்பித்துவிட்டார் என்பதற்கு திருகோணமலையில் நேற்று முன்தினம் நடந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் சான்றாகும்.

நாட்டின் ஜனாதிபதியா்க இருப்பவர் தனது கடமையை சரிவரச் செய்வது அவசியமாகும். அவ்வாறு அவ்ரால் கடமையைச் சரிவரச் செய்யமுடியாவிட்டால் அந்தப் பதவியிலிருந்து விலகுவதே உகந்தது.

தென்னிலங்கையில் இருக்கக்கூடிய பெரும்பான்மையின மாணவர்களை பாதுகாப்பதில் காட்டும் கரிசனைபோன்று எல்லா மாணவர்களையும் பாதுகாப்பதில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கரிசனை காட்டவேண்டும்.

மூன்று பிள்ளைகளின் தந்தையான ஜனாபதி மகிந்தவுக்கு பிள்ளைப்பாசம் பற்றி நன்றாகத் தெரிந்திருக்கும். இதில் சிங்கள பெற்றோர், தமிழ் பெற்றோர் என்ற பேதம் கிடையாது. எல்லோருக்குமே பிள்ளைப்பாசம் அளவுகடந்தது.

இந்நிலையில் ஐந்து மாணவர்கள் திருகோணமலைக் கடற்கரையில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டுள்ளரெனில் நாட்டில் நடக்கும் ஆட்சி எப்படி இருக்கும் என்பது உணரப்படவேண்டிய விடயமாகும்.

ஐந்து மாணவர்கள் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் இலங்கை தவிர்ந்த வேறொரு நாட்டில் நடந்திருக்குமாயின் ஆகக்குறைந்தது ஒரு அமைச்சராவது சம்பவத்தைத் தடுக்கமுடியாமைக்குப் பொறுப்பேற்று ராஜினாமா செய்திருப்பார்.

ஆனால் இது இலங்கை என்பதால் அப்படியொரு ராஜினாமாவை நினைத்தும் பார்க்க முடியாது.

எனினும் ஐந்து மாணவர்கள் சுட்டுக்கொல்லப்பட்டமைக்கான முழுப் பொறுப்பையும் ஜனாதிபதி ஏற்றுக்கொள்வதோடு, பிள்ளைகளை இழந்த பெற்றோருக்கு பதிலளிக்கும் பொறுப்பையும் அவர் ஏற்றுக்கொள்ளவேண்டும்.

இது ஜனாதிபதியின் தார்மீகக் கடமையாயினும், 'தமிழினம்' என்ற பெயரால் கொலைகள் நியாயப்படுத்தப்படுவது தொன்றுதொட்ட இலங்கை ஆட்சியாளர்களின் வழமை இதிலும் மேலோங்கவே செய்யும்.

## இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண

# அனைத்து அரசியல் கட்சிகளும் ஒன்றிணைந்து செயற்படவேண்டும்

## –ஜனாதிபதி மஹிந்த



(கொழும்பு)

தேசிய நெருக்கடிகளைத் தீர்க்கும் நடைமுறையில் அனைத்து அரசியல் கட்சிகளும் கருத்தொற்றுமையுடன் நடந்துகொள்வது அவசியமென ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

எத்தகைய அரசியல் கட்சிகளாக இருப்பினும் தேசிய இனப்பிரச்சினை விவகாரத்தில் பரந்த புரிந்துணர்வுடன் நடந்துகொள்வது முக்கியமானது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் களுத்துறையில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

தேசத்தின் இறைமை ,ஆட்குல ஒருமைப்பாடு ஆகியவற்றைக் கட்டிக்காத்து ஒற்றையாட்சி தீர்வுகளாக அரசாங்கம் திடசங்கற்பம் பூண்டு நிற்கின்றது.

தீர்வு நடைமுறைகளில் அரசாங்கத்தின் மீது முன்வைக்கப்படும் காரசாரமான விமர்சனங்களை கவனத்தில் எடுத்துக்கொண்டு தவறுகளைத் திருத்திக்கொள்ள நாம் எப்பொழுதும் தயாராகவே இருக்கிறோம்.

தீர்வு முயற்சிகளுடன் இணைந்ததாக அபிவிருத்தியை துரிதப்படுத்தும் விசேட திட்டமும் அமுல் செய்யப்படவுள்ளது.

வடக்கு கிழக்கில் பயங்கரவாத செயல்களைக் கட்டுபடுத்துவதற்காக அரசாங்கமும் படைத்தரப்பும் அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ளும் என்றார். (ந-9)

# புலிகளின் விமானம் எமது வான்பரப்பில் பறந்தால்- உடன் சுட்டு வீழ்த்தப்படும்

## விமானப்படைத்தளபதி

(கொழும்பு)

இலங்கை வான் பரப்பில் விடுதலைப் புலிகளின் விமானம் பறந்தால் சுட்டு வீழ்த்த தயங்கமாட்டோம் என்று ஸ்ரீலங்கா விமானப்படைத்தளபதி ஏர் வைஸ் மார்சல் டொனால்ட் பெரேரா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் டொனாலட பெரேரா தெரிவித்துள்ளதாவது,

விடுதலைப் புலிகள் விமான ஓடு தளத்தை அமைத் துள்ளார்கள் என்பதையும் 2 விமானங்களை வைத்துள்ளார்கள் என்றும் கூறுவதை நாம் வேடிக்கையாகப் பார்க்கவில்லை. இலகுரக விமானங்களை விடுதலைப்புலிகள் தயார்நிலையில் வைத்துள்ளதாக உறுதியான தகவல் கிடைத்துள்ளது.

மேலும் முல்லைத்தீவு மாவட்டத்தில் இரண்டாவது விமானஓடுதளம் அமைக்கப்பட்டுவருவதாகவும் செய்திகள் கிடைத்துள்ளன. விடுதலைப் புலிகளின் விமானங்கள் இலங்கை வான் பரப்பில் பறக்க முயன்றால் ஸ்ரீலங்கா விமானப்படை அதைச்சுட்டுவீழ்த்தும்.

இது தொடர்பில் விமானப்படைத் தரப்பு ஆழமாக விவாதித்துள்ளது. தேவைப்படுமாயின் இத்தகைய நடவடிக்கை மேற்கொள்ளவும் முடிவு செய்யப்பட்டுள்ளது என்றார் டொனால்ட் பெரேரா. (அ)

# தமிழ்க் கட்சிகளுடன் பேச்சு நடத்த சந்திரசேகரன் தமிழகத்துக்கு விஜயம்



(கொழும்பு)

மலையக் மக்கள் முன்னணியின் தலைவர் பெ. சந்திரசேகரன் தமிழகத்திற்கு விஜயம் மேற்கொண்டுள்ளார்.

இலங்கையின் பிரச்சினையில் இந்தியா உரிய தீர்வினை பெற்றுக்கொடுக்கும் வகையில் செயற்பட தமிழகக்கட்சிகள் இந்திய அரசுக்கு அழுத்தம் கொடுக்க முன்வரவேண்டும் இதற்கு தமிழகக்கட்சிகள் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்.இது தொடர்பாக தமிழகக்கட்சிகளுடன் பேச்சு வார்த்தை நடாத்தவே தமிழகம் சென்றுள்ளதாகத்தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் மலையக மக்களின் அடிப்படைப் பிரச்சினைகள் தீர்க்கப்படவேண்டும். அதற்கு இந்திய மத்திய அரசு உதவவேண்டும் போன்ற கோரிக்கைகளையும் தமிழகக்கட்சிகள் மூலம் அழுத்தம் கொடுக்கவும் சந்திரசேகரனின் விஜயம அமையவுள்ளது.

பெ.சந்திரசேகரன் திராவிட முன்னேற்றக்கழகத்தலைவர் மு.கருணாநிதி, மறுமலர்சி திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் வை.கோபாலசாமி, தமிழர் தேசிய பேரவைத் தலைவர்பழ.நெடுமாறன், பாட்டாளி மக்கள் கட்சியின் தலைவர் டாக்டர் ராமதாஸ் ஆகியோரையே சந்தித்துப் பேச்சுவார்த்தை நடாத்தவுள்ளனர். (அ-8)



"உரும்பிராய் இந்துக்கல்லூரியின் பரிசில் நாளும வித்தியா சஞ்சிகை வெளியீடும்" நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ். பல்கலைக்கழக பொருளியல் துறைத் தலைவர் பேராசிரியர் வி.பி.சிவநாதன் மங்கள விளக்கேற்றுவதையும், திருமதி சிவநாதன் , ஆய்வுரை நிகழ்த்திய கவிஞர் சோ. பத்மநாதன் கல்லூரி அதிபர் அ.ஈஸ்வரநாதன் ஆகியோரையும் படத்தில் காணலாம்.

## அதிபர்களுக்கான கூட்டம்

(கோப்பாய்)

கோப்பாய்க் கோட்டப் பாடசாலை அதிபர்களுக்கான கூட்டம் இன்று புதன்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் நடைபெறவுள்ளது.

சகல அதிபர்களையும் இதில் தவறாது கலந்து கொள்ளுமாறு கோட்டக்கல்வி அதிகாரி கேட்டுக்கொண்டுள்ளார். (அ-79)

## அதிபர் நியமனம்

(கோப்பாய்)

கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியின் அதிபராக இலங்கை அதிபர் சேவை தரம் -1ஐச் சேர்ந்த கோப்பாய் மகாவித்தியாலய அதிபர் அ.அகிலதாசும், கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலய அதிபராகப் புத்தூர் பஞ்சசீல வித்தியாலய அதிபராகக் கடமையாற்றிய எஸ்.ஞானசம்பந்தனும் நியமிக்கப்பட்டுள்ளனர். (அ-79)

## தினசரி தியானம்

### விவேகச் சிந்தனைகள்



உங்கள் இறைத்தன்மைதான் இறைவன் இருப்ப தற்கே அத்தாட்சி.நீங்கள் தீர்க்கதரிசி இல்லை என்றால் கடவுளும் உண்மை அல்ல. நீங்கள் கடவுள் அல்ல என்றால் வேறு எந்தக் கடவுளும் இருந்ததும இலலை. இருக்கப்போவதும் இல்லை. இதுவே பின் பற்ற வேண்டிய இலட்சியம் என்று வேதாந்தம் கூறுகிறது.

சுவாமி விவேகானந்தர்

# தாக்குதல்கள் தொடருமானால் மாணவர் போராட்டம் வெடிக்கும்

## தமிழ் மாணவர் ஒன்றியம் எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

திருகோணமலையில் தமிழ் மாணவர்கள் இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். இச் சம்பவம் ஆனது ஒட்டுமொத்த தமிழ் மாணவர்களையும் மக்களையும் கடும் கோபத்துக்குள்ளாக்கியிருக்கின்றது. இதனால் மாணவர்கள் கல்வியைத் தொடர்வதில் பாரிய சிக்கல் நிலை ஏற்பட்டுள்ளது.

இவ்வாறான சம்பவங்கள் இனியும் இடம் பெறுமாகவிருந்தால் தமிழ் மாணவர்கள் தமது சுய பாதுகாப்பினை உறுதிப்படுத்தும் நிலைக்கு தள்ளப்படுவர்.

சிங்களதேசம் மண்டியிடும் வகையில் மாணவர் போராட்டம் வெடிக்கும் என யாழ்.மாவட்ட தமிழ் மாணவர் ஒன்றியம் எச்சரித்துள்ளது.

நேற்று முன்தினம் திருகோணமலை தமிழ் மாணவர்கள் சிங்கள இராணுவ ஆக்கிரமிப்பாளர்களால் குண்டு வீசியும் சுடப்பட்டும் மிலேச்சத்தனமான முறையில் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் ஒட்டு மொத்த தமிழ் மாணவர்களையும் தமிழ் மக்களையும் கடும் கோபத்துக்குள்ளாக்கியிருப்பதுடன் தமிழ் மாணவர்கள் தங்களது கல்வியை தொடருவதில் பாரிய சிக்கலை உருவாக்கியுள்ளது.

இந்த இனவெறியர்களின் காட்டுமிராண்டித்தனமான; கோழைத்தனமான செயலை தமிழ் மாணவர் ஒன்றியம் வன்மையாகக் கண்டிக்கின்றது.

கடந்த சில நாட்களாக வடக்குக் கிழக்குப் பிரதேசங்களில் சிங்கள இனவெறியர்களும் அவர்களோடு கூட்டுவைத்துக்கொண்டு அலையும் ஒட்டுப்படைகளும் தமிழ் இளைஞர்களையும் மாணவர்களையும் அழித்தொழிப்பதற்குக் கங்கணம் கட்டிக்கொண்டு நிற்கின்றன.

இப் படுகொலைச் சம்பவமானது எமக்கு ஆழ்ந்த துயரினையும் அதிர்ச்சியினையும் அளிக்கின்றது. இதனைத் தமிழ் மாணவர் ஒன்றியமானது வன்மையாகக் கண்டிக்கின்றது.

எதிர்வரும் நாட்களில் இது போன்ற ஈனச் செயல்கள் இடம் பெறுமாக இருந்தால் தமிழ் மாணவர்கள் தமது சுய பாதுகாப்பினை உறுதிப்படுத்தும் நிலைக்கு வலிந்து தள்ளப்படுவார்கள் என்பதனை இச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தமிழ் மாணவர்களுடைய அகிம்சை ரீதியான கோரிக்கைகளுக்கு சர்வதேசத்தினதும் சிங்கள அரசினது சற்றும் செவிசாய்க்காத நிலை மோசமான விளைவுகளை ஏற்படுத்தும் என யாழ்.மாவட்ட தமிழ் மாணவர் ஒன்றியம் தெரிவித்துள்ளது. (ச)

# ஈழத் தமிழ் மக்களின் இன்னல்களை தீர்க்கும் எண்ணம் எதுவும் உண்டா?

## ஈழவேந்தன் ஜனாதிபதிக்குக் கடிதம்

(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காணும் எண்ணம் எதுவும் உண்டா என யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மா.க. ஈழவேந்தன் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் கேள்வி எழுப்பியுள்ளார்.

தமிழ் மக்களின் பிரச்சினைகள் குறித்து அவர் ஜனாதிபதிக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்திலேயே அவர் இக் கேள்வியை எழுப்பியுள்ளார்.

நீங்கள் ஆட்சிக்கு வந்து ஒரு மாதம் உருண்டோடியுள்ள நிலையில் யாழ்ப்பாணம், மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய இடங்களில் அப்பாவி தமிழ் மக்கள் சாகடிக்கப்படுகின்றார்கள்.

முதியவர், இளையவர்கள், ஆண்கள், பெண்கள் என்ற வேறுபாடின்றி இராணுவத்தின் துப்பாக்கிக்கு இரையாகின்றனர். பெண்கள் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டு ஈவிரக்கமின்றி கொல்லப்படுகின்றனர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இயங்க முடியாது மூடப்படும் அளவிற்கு துணைவேந்தரும் பேராசிரியர்களும் மாணவர்களும் தாக்கப்பட்டுள்ளனர்.

ஈழத் தமிழ் மக்களுக்காக குரல் எழுப்பிய மாமனிதர் ஜோசப் பரராஜசிங்கம் சாகடிக்கப்பட்டுள்ளார்.

இவ்வாறான சம்பவங்களின் மூலம் தமிழன் வாழவேண்டின் தமிழன் தன்னை ஆளவேண்டும் எனும் முடிவுக்கு வந்துள்ளோம்.

மலேசியா , சிங்கப்பூர் வலுவாக துணைநின்றது போல் நாங்களும் நட்போடு நாம் பிரிந்து செல்ல துணை நிற்பீர்களானால் இலங்கைத் தீவில் உண்மையான அமைதி நிலவும்.

சிங்கள, தமிழ் உடன் பிறப்புக்களும் நிலைத்து நிற்க உதவுங்கள் என ஈழவேந்தன் அனுப்பிய கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

# யாழ்.நகரில் நேற்று ராணுவம்...

இராணுவத்தினர் வானத்தை நோக்கி துப்பாக்கியால் சுட்டனர்.

இதனையடுத்து அப்பகுதியில் நின்ற மக்கள் சிதறியடித்தவாறு ஓட்டமெடுத்தனர். இராணுவத்தினர் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்ட செய்தியறிந்ததும் நகர வர்த்தகர்கள் அனைவரும் கண்ணிமைக்கும் நேரத்தில் கடைகளைப் பூட்டிவிட்டு ஓட்டமெடுத்தனர்.

தனியார் பஸ்கள் அனைத்தும் ஏற்றிய பயணிகளுடன் மாற்றுப் பாதையூடாக மின்னல் வேகத்தில் நகரைவிட்டு வெளியேறின. ஆட்டோக்களும் தாமதமின்றி வெளியேறின. இதனால் முக்கிய பாதைகளில் சனநெரிசல் ஏற்பட்டது.

வெளியிடங்களிலிருந்து யாழ். நகருக்கு வந்த மக்கள் செய்வது அறியாது திகைத்து நின்றனர். சிலர் வடபிராந்திய போக்குவரத்து பஸ்களில் ஏறி தமது பாதுகாப்பைத் தேடிக் கொண்டனர்.

சில நிமிட நேரத்தில் நகரம் சன நடமாட்டம் இன்றி வெறிச்சோடியது. உடனடியாக சம்பவ இடத்திற்கு விரைந்த மேலதிக இராணுவத்தினர் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இராணுவத்தினர் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதால் பதிலுக்கு இராணுவத்தினால் மேற்கொள்ளப்பட்டுவரும் கண்மூடித்தனமான தாக்குதல்களிலிருந்து தப்புவதற்காகவேதாம் தப்பியோடியதாக மக்கள் தெரிவித்தனர்.

நேற்றுப் பிற்பகல் ஒரு மணிக்குப் பின்னர் நகரைச் சூழவுள்ள கடைகள் அனைத்தும் மூடப்பட்டு நகரும் அதனை அண்மித்த பகுதிகளும் வெறிச்சோடிக் காணப்பட்டன.

இதேவேளை காயமடைந்த இராணுவத்தினர் இருவரும் யாழ். போதனா வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக பலாலி இராணுவ வைத்தியசாலைக்கு ஹெலிகொப்டர் மூலம் கொண்டுசெல்லப்பட்டனர். (ச)

# மாணவர்களின் மரணத்திற்கு...

குண்டுகள் பாய்ந்திருக்கின்றன என்று கண்டறியப்பட்டுள்ளது.

இவ் வன்முறைச் சம்பவத்தில் கொல்லப்பட்ட ஐவருக்கும் மிக அருகில் நின்றே துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டுள்ளது.

துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளவதற்கு முன்னதாக அவ்விடத்தில் கைக்குண்டுகள் வீசப்பட்டதற்கான அறிகுறிகள் இருப்பதாக ஆரம்பக் கட்ட விசாரணையில் இருந்து தெரிய வருவதாக யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் தெரிவித்தனர்.

இச்சம்பவத்தில் யார் சம்பந்தப்பட்டுள்ளார்கள், என்ன காரணத்துக்காக இது இடம் பெற்றது என்பது தற்போதைக்கு தெளிவாகத் தெரியவில்லை என்றும் கண்காணிப்புக்குழுவினர் தெரிவித்தனர்.

இதே வேளை இச்சம்பவங்களைத் தொடர்ந்து நேற்று திருமலையில் பதற்ற சூழ்நிலை நிலவியது. நேற்றுக் காலை பாடசாலைக்குச் சென்ற மாணவர்கள் பாதுகாப்புக் கருதி காலையிலேயே வீட்டுக்குத்திரும்பினர்.

அரச அலுவலகங்கள் மதியவேளையிலேயே மூடப்பட்டன. நகரில் மயான அமைதி நிலவுகின்றது. இதேவேளை 5 மாணவர்களின் உடல்களும் நாளை திருமலை இந்துக் கல்லூரிக்கு அஞ்சலிக்காக எடுத்துச் செல்லப்படவுள்ளது. இங்கு அஞ்சலிக்கு வைக்கப்பட்டு பின்னர் தியாகிகள் அரங்கில் அஞ்சலிக்காக வைக்கப்படும். அனைவரது இறுதிக்கிரிகைகளும் ஒரே இடத்திலேயே நடைபெறும் எனத் தெரிவிக்கப்பட்டது. (ச-4,8)

## இராணுவ வன்முறைகளை...

மாமனிதர் ஜோசப்பரராஜசிங்கம் படுகொலைக்குக் கண்டனம்தெரிவித்தும் படுகொலையைக் கண்டித்தும் கண்டன முழக்கங்கள் எழுப்பப்பட்டுள்ளன. (ச-4,8)












## பணிநிலை வெற்றிடங்கள்

செயல்திறன் அரங்க இயக்கம் நடைமுறைப்படுத்தும் உளசமூக மற்றும் நாடக அரங்கச் செயற்திட்டங்களில் உள்ள பின்வரும் பதவிகளுக்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. **நாடகத்துறை பயிற்றுவிப்பாளர் / போதனாசிரியர் (02பேர்)**
2. *தகமை:* சங்கீதம், நடனம், நாடகம், ஆகிய துறைகளில் பட்டம் பெற்றிருத்தல்/
   வட இலங்கை சங்கீதசபையினால் நடாத்தப்படும் 5ம் 6ம் தர பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.
   நாடகத்துறை அனுபவம்.
   கொடுப்பனவு ரூ. 9000/=
3. **இணைப்பாளர் (ஒருவர்) ~ உளசமூக மேம்பாட்டுச் செயற்பாடு**
   *தகமை:* A/L சித்தியடைந்திருத்தல் மேலதிக கல்வித்தகைமைகள் அத்துடன்
   இவ்வேலைத்திட்டத்தில் கடமையாற்றிய அனுபவம் விரும்பத்தக்கது.
   சமூக சேவையில் முன்னனுபவம்
   களநிலையில் வேலை செய்யும் ஆர்வம் உடல் ஆரோக்கியம்
   மோட்டார் சைக்கிள் சாரதி அனுமதிப்பத்திரம் பெற்றிருத்தல்.
   கொடுப்பனவு ரூ. 10000/=
4. **கள நிலை உத்தியோகத்தர் (ஒருவர்)**
   *தகமை :* A/L சித்தியடைந்திருத்தல்
   மோட்டார் சைக்கிள் சாரதி அனுமதிப்பத்திரம் பெற்றிருத்தல்.
   கொடுப்பனவு ரூ. 8000/=

*விண்ணப்ப முடிவு திகதி* : **10.01.2006**

விண்ணப்பங்கள் யாவும்
இயக்குனர் செயல்திறன் அரங்க இயக்கம்
அருளகம், ஆடிய பாதம் வீதி, திருநெல்வேலி,
யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

நிர்வாக / மனிதவள முகாமையாளர்
செயல்திறன் அரங்க இயக்கம்.

## நன்றி நவிலல்

கடந்த 28.12.2005அன்று காலஞ்சென்ற எனது மனைவி மேரிமலரின் மறைவு கேட்டு எனது இல்லம் வந்து எம்முடன் துயர் பகிர்ந்து மலர்வளையங்கள் வைத்தும் ஆறுதலும் தேறுதலும் கூறி பற்பல உதவிகளையும் செய்துதவி மரணச்சடங்குகளிலும் பங்குகொண்ட உற்றார்,உறவினர்,அயலவர், நண்பர்களுக்கும் 'வலம்புரி'ப் பத்திரிகையின் பிரதம ஆசிரியர், பிரதம ஒப்புநோக்குநர் உட்பட 'வலம்புரி'க் குடும்பத்தினருக்கும்,

மேரிமலரின் ஆன்ம இளைப்பாற்றிச் செபங்களில் பங்கு கொண்ட பக்தி சபையினருக்கும் அன்னாரின் ஆன்ம இளைப்பற்றித் திருப்பலியை ஒப்புக் கொடுத்து இறுதிப் பயணத்தை ஆரம்பித்து வைத்த வண.அருட் தந்தை நேசராஜா அடிகளாருக்கும் ஏனைய வண.அருட் தந்தையர்க்கும், அருட் சகோதரர்களுக்கும் 'நல்லாயன்' கன்னியர்மட அருட் சகோதரிகளுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

தகவல்,
ச.இராசேந்திரம் (கணவர்).
(ஓய்வு பெற்ற ஆசிரியர்)

'பூபாளம்',
ஆனைக்கோட்டை.

(0207)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 04.01.2006 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.